# பொழில் பண்பலையின் எழில்மிகு கவிதைகள்

ON AIR


தொகுப்பு

பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி

முனைவர் கி.துர்காதேவி

முனைவர் சிவகவி காளிதாஸ்


பொழில் பண்பலை

POZHIL FM

zeno.fm/pozhilfm

JJ PUBLICATIONS

பொழில் பண்பலையின் எழில்மிகு கவிதைகள்

# பொழில் பண்பலையின்
# எழில்மிகு கவிதைகள்


தொகுப்பாசிரியர்

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**

**முனைவர் கி.துர்காதேவி**

**முனைவர் சிவகவி காளிதாஸ்**



பதிப்பாசிரியர்

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**

வெளியீட்டாளர்

**JJ PUBLICATIONS**

EVERGREEN PARK, #09-09,

31 Hougang Ave 7, SINGAPORE - 538800

Tel. 6640 7064 HP. 9228 8544

Email: ilakkiyapozhil@gmail.com

admin@ilakkiyapozhil.com

Blog: www.ilakkiyapozhil.blogspot.com

# நூல் குறிப்பு


நூலின் பெயர்

**பொழில் பண்பலையின் எழில்மிகு கவிதைகள்**

**POZHIL PANBALAIYIN EZHILMIGU KAVITHAIKAL**

(The Poems by Pozhil FM)

Compiled and Edited by

**Paavalar ELLA. KRISHNAMURTHY**

**Dr. K. DURGADEVI**

**Sivakavi Dr. K. KALIDOSS**

முதல் பதிப்பு

**நவம்பர் - 2023**

அளவு

**டெம்மி (14 CM X 21 CM)**

வெளியீடு

**ஜெ.ஜெ.பதிப்பகம்**

**JJ PUBLICATIONS**

EVERGREEN PARK, #09-09,

31 Hougang Ave 7, SINGAPORE - 538800

Tel. 6640 7064 HP. 9228 8544

வடிவழகு & அச்சகம்

**மேம் கிரியேஷன்ஸ், சென்னை.**

பக்கங்கள் : 114

ISBN No : 978-981-18-8663-8

# படைப்பாளர்கள்

பாவலர் எல்ல. கிருஷ்ணமூர்த்தி
முனைவர் கி. துர்காதேவி
முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன்
கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி
கவிஞர் மருத்துவர் மகேந்திரன்
கவிஞர் இராகேஷ்வரி ராஜகுரு
கவிஞர் க. காயத்ரி
கவிஞர் க. செல்வகாமாட்சி
கவிஞர் சு. சிவராமன்
கவிஞர் ஆ. நவீன்குமார்
கவிஞர் வி. அகல்யா
கவிஞர் க. தெய்வீகன்
கவிஞர் து. நர்மதா துரைச்சாமி
கவிஞர் இதயா பழனிச்சாமி
கவிஞர் சோ. கு. செந்தில்குமரன்
கவிஞர் கா. பூங்குழலி
கவிஞர் ராபியா ஜேஎம்சி
முனைவர் ஈழம் தமிழப்பன்
கவிஞர் ஜியாவுதீன்
கவிஞர் கஸ்தூரி பரசுராமன்
கவிஞர் அங்கயற்கண்ணி ஸ்ரீனிவாசன்
முனைவர் ஜா. கிரிஜா
கவிஞர் ஆ. பூபாரதி
கவிஞர் சு. ஆத்மநாதன்
முனைவர் நா. தீபாராணி
கவிஞர் சிவசங்கரி
கவிஞர் பாரத்
கவிஞர் கு. நாகம்மாள்

# உள்ளே...


**பொழில் பயணம்** 1

**பொழில் பண்பலை** 4

**பொழில் பண்பலையைக் கேட்க** 7

**பொழில் வாழ்த்துப் பாடல்** 8

**<u>கவிதைகள்</u>** 9

மௌவல்

மட மான் பிணையோடு உகள

இரட்டைக் குழந்தைகள்

பழந்தமிழ் நாடு

வெண்தலைப்புணரி

வடவரை

அகவல்

ஐ

புன்னகை

தூது

உண்ண உழவு செய்

அன்பின் அலைகள்

அன்னை மொழி

கலங்கரை விளக்கு

புதுமைப்பெண்

கார்காலம்

யாதுமாகியவள்

பட்டிக்காடு

மூடுபனி

அழகென்பது எது
முகமூடி
பயணம்
எல்லாம் நன்மைக்கே
கலாச்சாரம்
காப்பியம்
கொண்டல்
மாலை
கவித்தூரிகை
காகிதப் பூக்கள்
யாதுமாகியவள்
நீ
மலர்
என் தலைக் கடனே
விருந்தோம்பல்
முழங்கும் திரை
அஞ்சிறைதும்பி
நளி சினை வேங்கை
அரவுறுதுயரம்
படலைக் கண்ணி

**பொழில் பண்பலை தொகுப்பாளர்கள் எண்ணம்** 100
**பொழில் மைல்கல்** 109



**பாவலர் எல்ல. கிருஷ்ணமூர்த்தி**
நிறுவனர் & தலைவர்,
வாழ்வியல் இலக்கியப் பொழில் நிறுவனர்,
பொழில் பண்பலை, சிங்கப்பூர்.

# பொழில் பயணம்

‘**வா**ழ்வியல் இலக்கியப் பொழில்’ என்ற இந்த தமிழ் அமைப்பு, கடந்த 11-11-2017ஆம் நாள் தொடக்க விழா கண்டது. செழுமையான பண்டையத் தமிழ் மற்றும் செறிவுமிக்க சங்ககாலத் தமிழ் இலக்கியச் செய்திகளையும், வாழ்வியல் நெறிமுறைகளையும், இக்காலத் தமிழர்கள் யாவரும், குறிப்பாக இளைய தலைமுறையினர் அறிந்து கற்பதற்கும் புதிய இலக்கியங்களைப் படைப்பதற்குமான மாபெரும் தளத்தை அமைத்துத் தருகின்ற நோக்கில் தொடங்கப்பட்டது.

சிங்கப்பூரில் வாழும் தமிழர்களுக்கு தமிழின் ஆழத்தையும், தொன்மையையும் விளக்கி, அவற்றுள் நாம் இக்காலத்தில் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற தேடலையும் முன்வைத்து யாவரும் பயன்பெறும் வகையில் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் ஆர்வம் கொண்ட அனைவரும், கவிஞர்கள், புலவர்கள், முனைவர்கள் எனத் தமிழ்த் துறை சார்ந்த மற்றும் தமிழ்த் துறை சாராத பல்வேறு தரப்பினரும், தமிழால் சங்கமிக்கும் இடமாக விளங்குகிறது ‘வாழ்வியல் இலக்கியப் பொழில்’.

‘வாழ்வியல் இலக்கியப் பொழில்’ முறையாக தம்முடைய நோக்கங்களைத் தெளிவாக வகுத்து அவற்றைச் செயற்படுத்தும் முறையறிந்து திட்டமிட்டுச் செயல்முறைப்படுத்தி வருகிறது.

## நோக்கங்கள்

- தமிழ் இலக்கியம் கூறும் வாழ்வியல் முறைகளை இளையோர்களிடம் சேர்த்தல்
- தமிழ் இலக்கியங்களை அன்றாடம் வாசிக்க வழிவகை செய்தல்
- குழந்தைகள் மற்றும் பெரியவர்களிடையே தமிழ்

இலக்கியங்களைக் கற்று, அவற்றின் மதிப்பு இயல்புகளை அறிந்து, அதன்வழி செயல்படவும் கடைபிடிக்கவும் வைத்தல்; அதன் மீதான ஆர்வத்தையும் வேகத்தையும் கூட்டுதல்

- ❖ சிறார்களும் அவர்தம் பெற்றோர்களும் இணைந்தே மேடைகளில் பங்கேற்க வழிவகை செய்து பாலமாக செயல்படுதல்
- ❖ ஒத்த கருத்துக்களையும் இலக்குகளையும் நோக்கமாகக் கொண்ட மற்ற தமிழ் அமைப்புகளுடன் கருத்துகளைப் பகிர்ந்து இணைந்து செயல்படுதல்
- ❖ மாணவர்களையும் மற்றும் பெரியோர்களையும் இலக்கிய கட்டுரைகள், கவிதைகள் மற்றும் சிறுகதைகள் எழுத ஊக்குவித்தல்
- ❖ முறையான இலக்கணம் கற்றுத் தரமான ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்டு உருவாகும் பலவித படைப்புகளை இதழ்களில் வெளியிட வழிவகை செய்தல்
- ❖ அனைத்து வயதினரும் பங்கேற்கும் வகையில், தமிழ் இலக்கியத்தின் கருத்துகளை எழுதுதல், ஓதுதல் போன்ற போட்டிகளை சிங்கப்பூர் அளவில் நடத்தி அதன் வழி தமிழ்ப் பணிகளை விரிவுபடுத்துதல். இதில், மழலையர், தொடக்க நிலை முதல் அனைத்து மாணவர்களும் பெரியவர்களும் அடங்குவர்
- ❖ இயல், இசை, நாடகம் என முத்தமிழ்ச் சுவைகளை முறையாக இளையோருக்கு கொண்டு சேர்த்தல்
- ❖ மகத்துவம் பொருந்திய தமிழ் மருத்துவக் குறிப்புகளைப் பகிர்ந்து பயன்படுத்த ஊக்குவித்தல்

## செயல்பாடுகள்

மேற்கண்ட நோக்கங்களைச் செயல்முறையாக்க,

- ❖ மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 9 மணி வரை, சிற்றுரைகள், சிறப்புரை, மாணவர்களுடைய இயல், இசை, நாடகப் படைப்புகளுடன் நிகழ்ச்சி நடைபெறும்
- ❖ தமிழ்ச் சொல்லாய்வு உரை மூலம் பல்வேறு கலைச்சொற்களின் பயன்பாட்டை அறிய வைத்தல்

- வாழ்வியல் இலக்கியப் பொழில் புலனக்குழுவில் பல அரிய நூல்களில் இருந்து தினசரி பதிவாக செய்யுள்களும் பொருளும் பதிவிடப்படுகின்றன
- தமிழார்வலர்கள், சிறார்கள் அவர்தம் பெற்றோர்கள் என குடும்பங்களாக இணைந்து நிகழ்ச்சியில் இலக்கியத்தில் இளைப்பாறுவார்கள்

## சிறப்பு அங்கங்கள்

### வேரும் விழுதும்:

'வேரும் விழுதும்' என்ற அங்கத்தில் தாய் / தந்தை வேராகவும் சேய் விழுதாகவும் குழுவாக இணைந்து சுவையான இலக்கிய விருந்து படைப்பர். குடும்பமாக இலக்கியத்தை பயின்று, மேடையில் நிகழ்ச்சி படைப்பதால் அவர்களுடைய குடும்ப பிணைப்பு மேம்படவும் இலக்கியத்தின் மீதான ஆர்வத்தை தூண்டவும் இந்த அங்கம் துணைபுரிகிறது.

இலக்கியத்தை எளிமையாகவும், சுவையாகவும், விளையாட்டாகவும் கற்க வகை செய்வதோடு பங்கேற்பாளர்கள் மத்தியில் தமிழ் ஆர்வத்தை தூண்டவும் உதவுகிறது

## இலக்கியப்புதிர்:

இலக்கியம், விடுகதை மற்றும் பழமொழி குறித்த வினா விடைகள், திரையில் தோன்றும். படத்தை குறிப்பாக கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல், பொருள் பொருத்துதல், குறுக்கெழுத்து வினாக்கள் போன்ற புதிர் அம்சங்கள் நிகழ்ச்சியில் நடத்தப்படுகிறது புதிரின் தன்மைக்கேற்ப ஒரு குழு நடவடிக்கையாகவும் தனி நபர் பங்கேற்கும் நிகழ்வாகவும் அமையும். இத்தகைய இலக்கியப்புதிர்கள் இலக்கியத்தை எளிமையாகவும், சுவையாகவும், விளையாட்டாகவும் கற்க வகை செய்வதோடு பங்கேற்பாளர்களிடம் தமிழ் ஆர்வத்தைத் தூண்டவும் உதவுகிறது

பாவலர் **எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
ekrishnamurthy@yahoo.com
+ 65 9228 8544
சிங்கப்பூர்

# பொழில் பண்பலை
## [Pozhil FM]

சிங்கப்பூரில், 14-01-2021 அன்று பொழில் பண்பலை என்ற இணைய வானொலி அறிமுகம் கண்டது, தமிழர்கள் அனைவரும் அன்றாடம் தமிழிலக்கியப் பாடல்களை இசையோடு கேட்க வழிவகை செய்யத் திட்டமிட்டுள்ளது. 24 மணி நேரமும் இலக்கியப் பாக்களை மட்டும் கேட்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு இதுவரை 190 நாடுகளுக்கும் மேலாக வாழும் மக்கள் கேட்டு மகிழ்கிறார்கள் என்றால் மிகையல்ல.

### 'பொழில் பண்பலை' [Pozhil FM] படைப்புகள்:

வாழ்வியல் இலக்கியப் பொழில், அமைப்பின் ஒரு அங்கமாக இருந்து செயல்பட்டு வரும் பொழில் பண்பலை குறிப்பாக பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு போன்ற அரியப் பாடல்களை 24 மணி நேரமும் ஒலிபரப்பு செய்துவருகிறது. மேலும், அவ்வப்போது நேரலையாக அறம், பக்தி, நூல் விமர்சனம் என வழங்கி வருகிறது. இதன் மூலம் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் பயன்பெறுகிறார்கள்.

### 'கவிநயம்' நேரடி ஒலிபரப்பு (ஜூலை 2022 முதல்):

பொழில் பண்பலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை ஒருமணி நேரம் 'கவிநயம்' நேரடி நிகழ்ச்சி இடம்பெறும். இதில் கவிஞர்கள் கொடுக்கப்படும் தலைப்பிற்குக் கவிதை இயற்றி அதனைக் குரல்பதிவாகப் பதிவிட்டு அனுப்புவர். பெரும்பாலான தலைப்புகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சொற்றொடர்களாக இருக்கும் என்பது தனிச்சிறப்பாகும். நிகழ்ச்சித் தொகுப்பாளர் தம்முடைய பாணியில் கவிதைகளைப் பற்றிக் கருத்துரைப்பார்.

### 'கவியரும்பு' நேரடி ஒலிபரப்பு (அக்டோபர் 2022 முதல்):

பொழில் பண்பலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை ஒருமணி நேர 'கவியரும்பு' நேரடி நிகழ்ச்சி இடம்பெறும். இதில் கல்லூரி மாணவர்கள் கொடுக்கப்படும் தலைப்பிற்கு கவிதை இயற்றி அதனைக் குரல்பதிவாகப் பதிவிட்டு அனுப்புவர். நிகழ்ச்சித் தொகுப்பாளர் தம்முடைய பாணியில் கவிதைகளைப் பற்றிக் கருத்துரைப்பார்.

## ‘கவிப்பொழில்’ நேரடி ஒலிபரப்பு (மே 2023 முதல்):

பொழில் பண்பலையில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை ஒருமணி நேர ‘கவிப்பொழில்’ நேரடி நிகழ்ச்சி இடம்பெறும். இதில் யாப்பிலக்கணம் அறிந்து பாக்கள் எழுதுவோரின் படைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில் யாப்பறிந்து பாக்கள் இயற்ற கொடுக்கப்படும் தலைப்பிற்கு பாக்கள் இயற்றி அதனை குரல்பதிவாகப் பதிவிட்டு அனுப்புவர். நிகழ்ச்சித் தொகுப்பாளர் தம்முடைய பாணியில் பாக்களைப் பற்றிக் கருத்துரைப்பார்.

**பொழில் பண்பலை ‘கவிநயம்’, ‘கவியரும்பு’ மற்றும் ‘பொழில் பாமாலை’ தலைப்புகள் - ஒரு பார்வை**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கவியரும்பு, கவிநயம் மற்றும் **பொழில் பாமாலை** நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்படும் தலைப்புகளுக்கு ஒரு சிறப்புண்டு. குறிப்பாக கவிநயம் நிகழ்ச்சிக்கு சங்க இலக்கிய நூல்களில் இடம்பெற்றுள்ள சொல் அல்லது சொற்றொடரை தலைப்பாக வழங்கி, பங்குபெறும் கவிஞர்களைச் சங்க இலக்கிய நூல்களை மீண்டும் புரட்டி பார்க்கவும் படிக்கவும் அதனை தங்களுடைய படைப்புகளில் இடம்பெற வைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

‘கவியரும்பு’ நிகழ்ச்சிக்கு புன்னகை, அலைகடல், அரவணைப்பு, சிலிர்ப்பு, கார்காலம், காத்திருப்பு, ஆர்கை, சிகழிகை, ஊர்க்குருவி, சேடல், பொங்கடி, நகல், முச்சங்கம், காப்பியங்கள், முதையல், விழிமூடா இரவு, மான்விழியாள் வான்சொரிவாள், எரிமலை, நவரசம், நிழல் போன்ற தலைப்புகளில் கவிதை இயற்ற வாய்ப்பு கொடுத்தது சிறப்பாகும்.

‘கவிநயம்’ நிகழ்ச்சிக்கு என் அம்மா, சந்தனக் காற்று, பனி, எல்லைக்கோடு, ஒற்றைச் செருப்பு, 180 பாகை, நட்பின் வடு, சிந்தாமணி, இளமுறுவல் அல்லது குறுநகை, அகவாய் மூடி, தேம்புனலைச் செழுங்கடல் தருமா, படலைக் கண்ணி, எல்லுறு மௌவல் நாறும், ஆடு பசி நீடு பசி, பகழி, நளி சினை வேங்கை, மட மான் பிணையோடு உகள, ஒள் நுதல், செம் கால் வெட்சி, அடுக்கல் மீமிசை, மக வெண்மீன், அகரம், வடவரை கொண்டல், விழவுக்களம், மேதினி, கௌவை, ஒவு, சேந்தன், செந்நெல், மூத்தக்குடி, கலாச்சாரம், தேறல், உளி தேடும் பாறை, இலைவிடு தூது, செஞ்சுடர், கவித் தூரிகை, இல்லாமல் இருக்கிறாய் போன்ற தலைப்புகளில் கவிதை இயற்ற கொடுத்தது சிறப்பாகும்.

**'பொழில் பாமாலை'** நிகழ்ச்சிக்கு கொற்கை, விரகு, மா, பேடை, இன்னல் தீர், மூவேந்தர், கலைகள், சொல்மலை, விழவுமுதலாட்டி, தேனும் தினைமாவும், கணையாழி, தேன் மயங்கு பாலினும், எத்துணை ஆயினும் ஈதல் நன்று போன்ற தலைப்புகளில் பாக்கள் இயற்ற கொடுத்தது சிறப்பாகும்.

சிங்கப்பூர் பொழில் பண்பலையில் ஒலிபரப்பான கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை நூலாக்கி தங்களுடைய கைகளில் தவழவிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி.

பாவலர் **எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
நிறுவனர் & தலைவர்,
வாழ்வியல் இலக்கியப் பொழில்
நிறுவனர் - பொழில் பண்பலை
சிங்கப்பூர்

**பொழில் பண்பலையை இணையத்தில் கேட்டு மகிழ...**

24 மணி நேரமும் தமிழ் இலக்கியப் பாக்களை ‘பொழில் பண்பலை’ (Pozhil FM) மூலம் கேட்டு மகிழ http://tinyurl.com/pozhilfm அல்லது Radio Graden App பதிவிறக்கம் செய்து தேடுதல் மூலம் Pozhil திவி தேடவும். http://radio.garden/listen/pozhil-fm/NfTOZXR3

Pozhil FM Zeno

Pozhil FM RadioGarden

# பொழில் வாழ்த்து மடல்

இந்த 'பொழில் வாழ்த்துப் பாடல்' வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பின் 39ஆவது மாதாந்திர சந்தப்பில் 09-01-2021 அன்று சிறப்பு விருந்தினர் திருமிகு அபிராமி ஜூவெல்லர்ஸ் உரிமையாளர் அவர்களால் இணையம்வழி வெளியிடப்பட்டது. இந்த பாடல் வழி அமைப்பின் நோக்கங்கள், செயல்படும் விதம் ஆகியவற்றை விளக்குவதோடு, தமிழர்தம் பண்டையக் கால வாழ்வியலை அறிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்றும் எடுத்தியம்புகிறது.

**பல்லவி**

பொழிலொன்று பொழிலொன்று பூத்திங்கு சிறக்குது
புலர்காலைப் புதுவாசம் புவியெங்கும் பரவுது !

**அனுபல்லவி**

சங்கத்தமிழ்ச் சாறெடுத்துச் சாதிக்கத் துடிக்குது
சந்தனமாய் நாள்தோறும் மணம்கமழ வைக்குது

(பொழிலொன்று X 1)

**சரணம் - 1**

சிங்கப்பூரில் சீர்பெற்று சிறப்பாக இயங்குது
சிந்தையிலே தமிழ்ப்பண்பைச் சீராகக் கொடுக்குது
முந்தைவாழ் தமிழ்மரபை முனைப்போடு சேர்க்குது
முத்தமிழின் சுவைக்காண முழுமூச்சாய் இயங்குது !

(பொழிலொன்று X 1)

**சரணம் - 2**

இளையோர்க்கும் பெரியோர்க்கும் இணைக்கின்ற பாலமாய்
இல்லறத்தின் வழிகாட்டும் இலக்கியத்தை ஊட்டுது !
வேரோடும் விழுதோடும் விரிகின்ற ஆல்போல்
விந்தைகொள் தமிழ்ப்பாலை விதவிதமாய் ஊட்டுது !

(பொழிலொன்று X 2)




ஆக்கம்: பாவலர் **எல்ல.கிருஷ்ணமூர்த்தி**

சிங்கப்பூர்

06-09-2023

## மௌவல்

(எண்சீர் விருத்தம் - அந்தாதி)

மரமல்லி செடிமல்லி மணங்கூட்டும் எல்லை
மங்காத கவினழகில் ஈர்த்துநிற்கும் முல்லை
இரங்குகுணம் கற்பிக்கும் இயற்கையெனும் தூணாய்
எடுத்தியம்ப கண்குளத்தில் மிதந்துவரும் மீனாய்
தரவரிசை முன்வரிசை தரணிவாழ் முல்லை
தனித்தமிழைச் சுமந்துவர தண்ணிழலாய்ச் சொல்ல
சரமாக தொடுப்போரே சங்கமணம் சேர
சாலமிகு நற்பாக்கள் சந்தமொழி வார்ப்பீர் !

வார்ப்பீரே மல்லிகையை வண்டமிழில் சேர்த்து
வானுயர மேவிவரும் சன்னமானப் பாக்கள்
நீர்வொட்டா மரையிலையும் நன்னிலையில் வாழ
நிலைமாறா நன்னீராம் நயமிக்க வாழ்வோர்
வேர்பற்றாத் தண்டிற்கும் விரைந்தூட்டும் சத்தை
வென்றுவிட கொய்தாலும் நன்னீரோ மாறா
கூர்வாளால் கொய்தாலும் குழந்தைக்கைப் பற்ற
குறைவில்லா நறுமணத்தைக் கொடையாக வீசும் !

வீசுவது பரப்புவது விதியாக எண்ணும்
வினைபுரிந்து சொல்பாடம் தருமிந்த மல்லி
மாசுநிறை தரணியிலே மதிப்புயர்ந்து நிற்க
மனிதகுலம் கற்பதற்கு மையத்தை வைத்து
பேசுமொழி? நூறுவுண்டு பிதற்றுமொழி உண்டு
பேறுபல பெற்றவரும் தமிழ்பரப்பில் கோடி
ஆசுகவி நூறுபடை அருந்தமிழைச் சொல்லி
அவணியெங்கும் தமிழ்ப்பொழிலின் பண்பலையில் மல்லி !

*குறிப்பு:*
*மேவு - பரவு*
*மரை - தாமரை*
*மௌவல் - ஒருவகை மல்லிகை*

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
வாழ்வியல் இலக்கியப் பொழில்,
சிங்கப்பூர்.

## சொல்லொழுகும் பெண்ணே...

(எண்சீர் விருத்தம்)

நல்லொழுக்கம் பலவுண்டு நானறிந்த பின்னே
நயவஞ்சம் இல்லாத நாடறிந்தப் பெண்ணே
சொல்லொழுகும் அருவியின்பம் சுவையறியக் கண்டேன்
சுருக்கமென நீஉதிர்த்த சொற்றொடரால் வீழ்ந்தேன்
கல்லுருக்கும் உளியாலே கழித்தெடுத்த பின்னே
கண்ணசைக்கும் காலமெப்போ கசிந்துருகி நின்றேன்
பல்வரிசை பால்முத்தாய்ப் பளிங்குநிற வண்ணம்
பட்டொளியாய் வீசுமுந்தன் பார்வையின்பால் மின்னும் !

தேனருவி சொல்மருந்து தெவிட்டாமல் ஊட்ட
தினைமாவும் தேன்சொரியும் செந்தமிழ்ப்பால் ஊற்ற
வானருகே மிதக்கின்ற வலிமையுந்தன் சொல்லாம்
வகைநூறு தந்தாயே வான்மழையாய்க் கொட்ட
யானைபலம் கண்டுணர எளியோனைத் தூக்கி
எங்கிருந்தோ வந்தாயே ஏற்றமதைக் காட்ட
சேனைபல நின்றாலும் சேய்மடியைத் தாவ
செய்நன்றி கொள்வேன்நான் செந்தமிழ்ப்பால் மேவ !

மண்தாண்டி மலைதாண்டி மாக்கடலும் தாண்டி
வானவரும் வாழ்த்துவரே வணங்கிவுனை வேண்டி
விண்தாண்டி விரிகிறதாம் வியப்பில்கைக் கூப்ப
விரைந்தோடும் பாலருவி வேந்தனைப்போல் ஆள
கண்தாண்டி கலைவேனே கனநூற்றைத் தாண்டி
கடுந்தவமாய்க் காத்திருக்க கனியுமுந்தன் பேச்சால்
தண்கூட்டும் தருநிழலாய் தயவுன்னைக் காண்பேன்
தந்திரச்சொல் மறையாக்கி தாயுன்னைக் கண்டேன் !

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
வாழ்வியல் இலக்கியப் பொழில்,
சிங்கப்பூர்

## தமிழ்த்தேன்

(இன்னிசை வெண்பா - அந்தாதி)

செழுந்தேன் பொழிய தெளிந்தேன் உருக
விழுந்தேன் அருந்த விரைந்தேன் முருக
பயந்தேன் நகர்ந்தேன் பழந்தேன் வருந்தேன்
வியந்தேன் வழிய விரைந்து !

விரைந்தேன் கொழிக்க விளைத்தேன் பயிராய்க்
கரைந்தேன் உரக்க கலந்தேன் பருக
அருந்தேன் இதர அயர்ந்தேன் களித்தேன்
மருந்தேன் வினவ மறந்து !

மறந்தேன் தருத்தேன் மலையின் நறுந்தேன்
கறந்தேன் வளியில் கலப்பிலாப் பாவை
அவையில் மலர அழகுறும் சேடல்
சமைத்தோர் பகிர்தல் செழிப்பு !

பொருள்:
விழுந்தேன் - விழும் + தேன்
அருந்தேன் - அருந்த மாட்டேன்
மருந்தேன் - மருந்து ஏன்
தருத்தேன் - மரக்கிளையில் உள்ள தேன்
பழந்தேன் - பழமை + தேன்
வருந்தேன் - வருந்த மாட்டேன்
நறுந்தேன் - நல்ல தேன்
சேடல் - பவளமல்லிகை

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
வாழ்வியல் இலக்கியப் பொழில்,
சிங்கப்பூர்

## மௌவல்

எல்லுறு மௌவல் நாறும்
எல்லுறு மௌவல் நாறும்
எழிலுறு மனமும் நாடும்
கவினுறு கவிதை பாடும்
புவியினில் பூக்கோலம் போடும்
தொல்லுறு சுடர் போல் நங்கையும்
மல்லுறு வரை மார்பனும்
மெல்லுறு இதழ்களால் பாடும்
கள்ளூறு கவிதனில் மூழ்கி
விசையுறு மனதினை நாளும்
இசையது இனிதாய் ஆளும்
வசையது மழையாய் வரினும்
அசையாது நினைந்ததையே தேடும்
நதிமிசை ஓடும் நினைவும்
மிகுபசையாய் மனதுள் பதியம் போடும்
என்னுள் என்னுள் என்றும்
கண்ணுள் கண்ணுள் நின்றும்
கனவுள் கனவுள் சென்றும்
நிலையாய் நிலையாய் வெல்லும்
மெய்மை அன்பே என்றும்
உரமாய் உறவாய் மீளும்
பவளமல்லி கொடியாய் படர்ந்து
பவனி வருமே தொடர்ந்து
இருவாச்சி மல்லிகை மலர்ந்து
உருவாக்கும் உன்னத விருந்து
ஒளிரும்
மல்லிகை மணமோ
கதிரை காதலாய் நாடும்
எல்லுறு மௌவல் நாறும்
எழிலுறு மனதை நாடும்...

**முனைவர் கி. துர்காதேவி,**
வேல்ஸ் பல்கலைக் கழகம்,
சென்னை.

# மட மான் பிணையோடு உகள

மட மான் பிணையோடு உகள
பிடிகளிறு மகிழ்வுடன் பிழிற
பீலிமயில் மழை கண்டு அகவ
புரவி தன் துணையோடு இணைய
தனித்திருந்து
தவித்திருந்து புலம்புகிறேனடி.

இணைவில் தோன்றிய பிரிவு கவிதை இது.

உனைப் பிரிந்த கால இடைவெளியில்
கண்ணம்மா
இரு கண் காணும்
காட்சிகளில்
இருப்பதெல்லாம்
உன் நினைவின் ஆட்சியே!
இணையுடனே இருவாச்சி
பறவைதனை பார்க்கையில்
என் தனிமை
துணையாகிக் கொள்வது
உன் நினைவுகளையே!
ஆம்
என் தனிமை
துணையாக்கிக் கொள்வது
உன் நினைவுகளையே!

உளம் நோக நீ பேசிய வார்த்தைகளை
மனம் விரும்பி ஏற்பதற்கு
அரளிக் கனியை விரும்பி உண்ணும்
இருவாச்சிப் பறவை

கற்றுத் தந்ததடி - சகியே
நான் சற்றுத் தெளிந்தேனடி!
நான் சற்று தெளிந்தேனடி!

கணப்பொழுதும் பிரியேன் என்றாய்
ரணமாக்கிப் பிரிந்து சென்றாய்.
பூ இடைப்படினும்
யாண்டு கழிந்ததென வருந்தும்
மகன்றிற் பறவை போன்றவளே!
இத்தனை கால பிரிவு வலியை
ஏன் தந்தாய்?

பிரிவின் வலியை எனக்குணர்த்திய
இருவாச்சிப் பறவையே
தூது செல்வாயோ - என் கவிதையை
ஏந்தி - என்
ஏந்திலையிடம் தூது செல்வாயோ!

கருங்குயில்கள் இரண்டு
காதலில் திளைத்துப் புரண்டு
குறுங்காவியம் படைக்கக் கண்டேன்.
கணப்பொழுதில்
நறும் கூந்தல் பிறை நுதழாள்
அருங்காட்சியாய் என் கண்ணில் வந்தாள்.
பிரிவு நோயைத் தந்தாள்.
பெரும் துன்ப நோயை நீக்க
மருந்தென
தூது செல்வாயோ இருவாட்சியே
பறந்து என்
துயரம் களைவாயோ?

மடமான் தன் பிணையோடு
துள்ளி குதித்து மகிழக் கண்டேன்.
சடசடவென வழிந்ததடி!
கண்ணீர்! - உன்
நினைவுக்கொள்ளியால்
படபடவென இதயம் பதறக்கண்டேன்.
துன்பம் தாளாது
ஒரு முடிவு கொண்டேன்
இன்பம் எனை ஆள
என்றும் நீ வேண்டுமென்றேன்.
ஆம் - என்னுள்
என்றும் நீ வேண்டுமென்றேன்.

பிரிவின் வலியை எனக்குணர்த்திய
இருவாச்சிப் பறவையே
தூது செல்வாயோ? - என் கவிதையை
ஏந்தி - என்
ஏந்திழையிடம்
தூது செல்வாயோ?

**முனைவர் கி. துர்காதேவி,**
வேல்ஸ் பல்கலைக் கழகம்,
சென்னை

# இரட்டைக் குழந்தைகள்

எண்ணும் எழுத்தும் இரட்டைக் குழந்தைகள்
எந்தமிழ் மொழியோ ஈன்ற பிள்ளைகள்
அகர முதலாய் னகர இறுவாய்
ஒன்று தொடக்கம் பதின்ம அடுக்கம்
அவைதம் கிளைகள் கவைத்துப் பெருகும்
அற்புதப் பிறப்பே சொற்பிறப்பாகும்
ஒரு பொருள் இரு சொல் இரட்டை கிளவி
ஒட்டிப் பிறந்த இரட்டைக்குழந்தைகள்
சிலேடை என்பது இரட்டுறமொழிதல்
சிறு சொல் பல பொருள் செப்பவும் வருமே
எதுகையும் மோனையும் இரட்டைப் பிறப்பு
ஒரு கை குறைந்தால் தொடை அறும் பாட்டு
பாணியும் தூக்கும் சேர்ந்ததே இசைக்கும்
பார்வையில் கண்கள் ஒன்றையே பார்க்கும்
இரட்டை விருத்தம் கழிநெடிலடியே
இதுவோ பதினொண் சீர்மேல் வருமே
இரட்டைத் தொடையாம் ஒரே சொல் தொடுப்பது
இரட்டை சுழியோ ஐகாரமாகும்
இரட்டை தவிசு இணையிரு இருக்கை
இரட்டைப் புலவர்கள் இளமுது சூரியர்
வாய்மையும் பொய்மையும் மனிதனின் செல்வங்கள்
வறுமையும் செம்மையும் இரட்டைக் குழந்தைகள்

**முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன்**
திருப்பெருந்துறை

# பழந்தமிழ் நாடு

கடல் கொண்ட போதும் கரை ஏறி வந்த கனிவான கண்டு மொழியாள்
திடல்கண்ட வீரர் புலியாக நின்று தனைக்காக்க மகிழும் தமிழாள்
மடல் கொண்டதாழை மலைகண்ட காந்தள் தினைதந்து செந்நெல் பெறுவாள்
முடல் கொண்ட முல்லை மலர் சூடி மருதப் பனை நுங்கு அன்ன இனியாள்
வளம் கொண்ட நாடு அறம் அன்பினோடு திகழ்கின்றதெங்கள் நாடு
குளம் ஏரி ஓடை வயல் வந்து பாய உழுகின்ற செஞ்செய் நாடு
இளந்தென்றலேறி மலரோடு பேசி அலஞ்சென்றுவர் கண்ட நாடு
கலங்கண்ட சாலி பசித்தோர்க்கு நாளும் நலன் கொண்டு நல்கும் நாடு
குமரான மாதர் தமிழ் பேசக் கேட்டுக் குயில் பாடுஞ் செந்த மிழ்நாடு
சமரான போதும் பகையோர்கள் கேட்கத் தவறாது வழங்கும் தமிழ்நாடு
நமன் வந்த போதும் நடுங்காது நின்றம் பேசுகின்ற தமிழ்நாடு
சமன் செய்து பார்த்துச் சரியான தீர்ப்புத் தருகின்ற நல்ல தமிழ்நாடு
எழுசீர் நிகழ்ந்து உலகோர் வியந்து பழுதின்றி வாழும் தமிழ்நாடு
கழுநீ ராம்பற் கமலம் மலர்ந்து கவினுறு பொழிலெந் தமிழ்நாடு
உழுவோர் மகிழ்ந் துறு பசிகலைந்து வழுவா நெறிவாழ் தமிழ்நாடு
நற்றவ ஞானியர் கற்றவர் யாவரும் நாடிநலம் புரிதமிழ்நாடு
பெற்றவர் தெய்வம் பிள்ளைகள் செல்வம் நற்குணம் நாட்டிய தமிழ்நாடு
கொற்றவர் மூவரும் நற்றமிழ்காத்துக் கூடிய சங்கத் தமிழ்நாடு
கொற்றவை தவ்வை சேயோன் சிவன் மால் கும்பிட்டு வாழுந் தமிழ்நாடே!

**முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன்**
திருப்பெருந்துறை

# தேன் மயக்கும் பாலினம்

தேன்மயக்கும் பாலினம் மிக்க தாக
தெள்ளுதமிழ் திருக்குறளும் தகமு மன்றோ
வான்மயக்கும் வானவில்லின் வண்ணம் போல
வளர்சங்கப் பாடலவை வாழ்ந்து காட்டும்
கான்மயங்கு சோலைவளர் பூக்கள் போல
கணக்கற்ற மொழிகள் தாம் இருந்த போதும்
நான்மயங்கு செந்தமிழ்போல் நயத்தைக் கூறும்
நல்லதொரு மொழியுண்டா எண்ணிப் பாரீர் !

முல்லைப்பூ பிச்சிப்பூ மணப்ப துண்டு
முத்தமிழ்க் கீடாக மணப்ப துண்டா ?
கொல்லைவளர் தெங்கிளநீர் இனிப்ப துண்டு
குளிர்நிலவாம் தமிழ்ச்சொல்லாய் இனிப்ப துண்டா ?
எல்லைவான் மழைபெய்து காப்ப துண்டு
இனியதமிழ் மழைபோலக் காப்ப துண்டா ?
எல்லையில்லாக் கடற்பரப்பு இயற்கைக் காட்சி
எந்தமிழ்க் கீடாமோ எண்ணிப் பாரீர் !

ஆலமர மாகுதமிழ் முன்னர் வந்து
அனைத்துலக மொழிகளுமே வணங்கி நிற்கும்
கோலமிகு குற்றால அருவி யாக
கொட்டுகின்ற தமிழ்போன்ற மொழிகள் உண்டா ?
பாலமிகு ஆறாக பயங்கள் நல்கும்
பைந்தமிழ்போல் பிறமொழிகள் பாய்வ துண்டா ?
பாலைவன மாகிவரும் வைய மீதில்
பசுஞ்சோலை தமிழன்றோ எண்ணிப் பாரீர் !

ஐம்பாலின் பிரிவுள்ள மொழிகள் உண்டா ?
அகத்திணையும் புறத்திணையும் அவற்றில் உண்டா ?
செம்மைக்கு பாவகைகள் சேரல் உண்டா ?
செம்மொழித் தகுதியெல்லாம் சேர்ந்த் துண்டா ?
அம்மைமிகு அணிவகைகள் அவ்வற்றுக் குண்டா ?
ஆசுகவிப் பிரிவுகள்தாம் அங்கே உண்டா ?
உம்மையாம் தொகைவகைகள் உண்டா உண்டா ?
உலகமொழி தமிழன்றோ எண்ணி பாரீர் !

**முனைவர் ஈழம் தமிழப்பனார்**
கோவை

## கவித்தூரிகை

கவித்தூரிகை,
மயிலிறகு
மல்லிகை மணம்
மாங்கொம்பு
மின்னற் கீற்று
மீசை முறுக்கு
கவித்தூரிகை,
கற்பனை வளம்,
காலைப் பனித்துளி
குற்றால அருவி
கோடை மழை
குறுவைப் பயிர்
கவித்தூரிகை,
அழகின் சிரிப்பு
அத்திப் பழம்
ஆல மரம்
எள்ளின் மூக்கு
ஏணிப்படி
கவித்தூரிகை,
கனவுக் கன்னி
காதற் பித்து
தங்க நகை
தழம் பூ
துவர்கொள் செவ்வாய்

**முனைவர் ஈழம் தமிழப்பனார்**
கோவை

## நவரசம் (ஒன்பான் சுவை)

நகையெனப்படுவது
குழந்தை சிரிப்பு சிரிப்பு சிரிப்பு
அழுகையென்பது
இழப்பின் ஏக்கம் ஏக்கம் ஏக்கம்
இளிவரல் என்பது
அம்மா பிச்சை பிச்சை
மருட்கை யென்பது
மயிலின் தோகை தோகை தோகை
அச்சம் என்பது
புவியின் கண்கள் கண்கள் கண்கள்
பெருமிதம் என்பது
எங்கள் பாரி பாரி பாரி
வெகுளி என்பது
கொன்பன் யானை யானை யானை
உவகை என்பது
குயிலோசை ஓசை ஓசை
சாந்தம் என்பது
புயலுக்குப் பின்னே பின்னே பின்னே

**முனைவர் ஈழம் தமிழப்பனார்**
கோவை

# நிழல்

அம்மா அம்மா ஆலமரம்
அந்த மரத்தின் நிழல்தண்ணில்
தம்பி தங்கை தன்னுடனே
தட்டா மாலை சுற்றிடுவேன்

கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்
கனிகள் கொடுக்கும் மரங்களடா
பற்றுக் கொள்வேன் அவர்நிழலில்
பாடம் நன்கு படித்திடுவேன்

ஆத்திச் சூடி முதலான
அறங்கள் கூறும் மரநிழலில்
ஏத்தித் தொழுது படித்திடவே
எல்லோ ரும்மே வாருங்கள்

**முனைவர் ஈழம் தமிழப்பனார்**
கோவை

## வெண்தலைப்புணரி

(நுரைகளுடன் கூடிய கடல் அலை)

மலைமீது பூத்த புல்வெளி போலே
அலைமீது உலவும் பூம்பொழில் நுறையே
வலையாவும் மேயும் உன்னுடல் மேலே
தலைமுறைத் தொழிலைத் தருவதும் நீயே...!

விலையாகும் மீன்கள் விளையாடும் கடலில்
தலையாய உயிர்கள் தண்ணீரில் வாழ
மலைப்பான பாதை மண்ணிலத்தில் போலே
துளைப்பானைக் கொண்டே துளையிட்டோம் உன்னை...!

சிலைவடித்த மனிதன் சிலமைல்கள் தாண்டி
கலையுணர்வை படைக்க கடற்பயணஞ் செய்து
தொலைதூரஞ் சென்று துணைக்கண்டம் கண்டும்
மலைத்தே போனான் மாளிகையாய்க் கப்பல்..!!

விலைமதிப்பு மிக்க விண்வெளிக் கணையும்
அலைகடலுக் குள்ளே அனைத்தையும் ஏற்று
நிலைகுலையா நீயோ நிதான மில்லா
கொலைகாரச் சுனாமியைத் கொடுத்தது ஏனோ..!

**கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி**
சிங்கப்பூர்

## வடவரை (இமயமலை)

கலைகட்டும் கைலாயம்
மலைமுட்டும் உயரத்திலே
தொலைவெட்ட தொடர்கின்ற
சிலைவடிவாம் சிவன்தனையே

சிவன்தனின் சிறப்பெல்லாம்
அவன்தலையின் கங்கைநதி
எவன்பாவமும் தீருமிங்கே
இவன்மவன் பிரம்மபுத்திரா

புத்திரனாய்ப் பிறந்தவர்க்கோ
பெற்றகடன் தீர்த்திடவே
பத்திரமாய் நாட்டினையே
பகைவரிடம் காத்திடவே

காத்துநிற்கும் கைகளிலே
கனமானத் துப்பாக்கி
பார்த்துப்பேச யாருமில்லை
பனிமழையில் உருக்குலையா

உருக்கமான காதலியின்
நெருக்கமான நினைவலையால்
ஒருவருடம் போனதங்கே
எல்லைப்படை வீரனாக....

வீரந்தொட்ட பலருக்கோ
சிக்கிமுக்கி கல்லுமங்கே
ஈரமாக உதவியதே
துயர்துடைக்கும் மருந்தாக...

மருந்தென்றால் துண்டுபீடி
புகைவிட்டே மறந்திடுவான்
பருந்தினைப்போல் பார்வைதானே
இமயத்தின் இயற்கையூடே....
இயற்கையின் சிகரமென்றால்

எவரெஸ்ட்டே இதன்பெருமை
செயற்கையாக மலைவாழிடம்
டார்ஜிலிங்கும் சிலுசிலுக்கும்...

சிலிர்க்கும் நதியென்றால்
சிந்துவைத்தான் பாடிடுவார்
துளிர்க்கும் மேகமெல்லாம்
உறைபனியாய் உறங்கிவிடும்...

விடுதலை யடைந்துமின்னும்
இமயத்திலே பங்குகொள்ள
நடுநிலையைத் தவறியதே
நம்மையொட்டி நாடெல்லாம்....

நாட்டுணர்வின் பெருமையாக
இமயமலை நம்மரணாய்
காட்டமான வீரர்சிலர்
இமயத்துக்கே அரனாக...

அறமொன்று பிறந்திருந்தால்
சிறந்தந்து காப்போரை
வரம்வாங்கி வாழ்த்திடுவோம்
வீரனாக நிற்பவனை...

நிற்கின்ற மலையெல்லாம்
நீரருவி கொட்டுமானால்
கற்கின்ற மனிதரெல்லாம்
கலைஅறிவை விற்கமாட்டார்...

பற்றுள்ள பறவையினம்
பயமறியா வாழுதிங்கே
உற்றதுணை காத்துவாழ்ந்தால்
உனதுயரம் இமயந்தானே...

**கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி.**
சிங்கப்பூர்

## அகவல்

ஏனென்னைப் படைத்தாய்? இறைவா - இங்கு
ஏனென்னைப் படைத்து கல்லாய் நின்றாய்?
நானுன்னை கேட்பதெல்லாம் வானுலகில்
உன்னருகே இருக்கும் வரம் மட்டும்தான்.
நானோ சிறுபிள்ளை....உந்தன் கைப்பிள்ளை....
சொன்னதையே சொல்லி அழும் கிளிப்பிள்ளை.
என்ன தவறு செய்தேன்? தெரியவில்லை
வாழும் வகையும் ஒன்றும் புரியவில்லை
சம்சார கடலில் என்னை தள்ளிவிட்டு
சந்தோஷமாய் நீயும் புன்னகைக் கின்றாய்.
கண்ணில் தெரியா கயிற்றின் முனையை
கையில் வைத்தே ஆட்டுவிக் கின்றாய்.
பாவமும் நீயே ...தருமமும் நீயே....
பாவம் போக்கிடும் பரிகாரமும் நீயே.
தருமம் காத்து தலைகாப் பவனும்நீயே.
சிரிக்க வைப்பவனும் நீ - பின்னால்
சிந்திக்க வைப்பவனும் நீ
வாரிக் கொடுப்பவனும் நீ - சமயத்தில்
வாரி விடுபவனும் நீ
கைத்தூக்கி விடுபவனும் நீ - நட்டாற்றில்
கைகழுவி விடுபவனும் நீ.
என்னுள் நிறைந்து பொம்மையென எங்கும்
என்னை நீயே நித்தமும் ஆளுகின்றாய்.
என்ன செய்ய? துன்பம் மீறுகையில்
கருமேகம் கண்டவுடன் தோகை விரித்தாடும்
அருமை மயில் அகவும் அதுபோல்
குறைகள் அனைத்தையும் பித்தனை போல்நானும்
இறைவா உன்மேல் அகவற்பா படித்துவிட்டேன்.
இறங்கிவந்து கண்ணீரை நீயும் துடைப்பாயே...!

**கவிஞர் மருத்துவர் மகேந்திரன்**
புதுச்சேரி

## ஐ

ஐயனின் ஐயை ஐந்துநோக்கி
ஐங்கரன் நாமம் நாவில் தேக்கி
ஐந்தெழுத்து மந்திரம் மனதில் இருத்தி
ஐயமின்றி தொழுதால் நம் வாழ்வை
ஐயப்படுத்துவான் ஐயம் ஒன்றுமில்லை.
ஐயம் நீங்கிடின் ஜெயம் ஜெயம்தானே.
ஐயன் வள்ளுவன் படைத்திட்ட வான்புகழ்
குறள்வழி நாமும் நடந்திடின் வாழ்வின்
ஐயம் நீங்கி ஐயனின் திருப்பாதம்
ஐயமின்றி அடைந்திடுவோம். ஐயம் ஏதுமில்லை.
ஆங்கில எழுத்தின் ‘ஐ’ உணர்த்துவதோ
அகங்காரத்தை... ஆணவத்தை... ஆர்பரிப்பை.
தமிழின் ’ஐ’ யோ அழகையும் வியப்பையும்
தாராளமாய் அள்ளி வழங்கி கொண்டாடுகிறது.
ஐயோ என்று அழைத்திடாதீர் மனைவியை அழைத்ததாக
காலன் பாசக் கயிற்றோடு வந்திடுவான்
ஐயமின்றி என்றொரு ஐதீகம் இங்குண்டு.
ஐயோ என்று இனி சொல்லவேண்டாம்
ஐ என்று சொல்லி வாழ்வை ரசித்திடுவோம்ஞ்..!

**கவிஞர் மருத்துவர் மகேந்திரன்**
புதுச்சேரி

## புன்னகை

மழலை பேசும் முதல் மொழி!
மனித குலத்தின் பொது மொழி!
வசந்தத்தை வரவேற்கும் மலரைப் போல்,
வந்தோரை வரவேற்கும் புன்னகை அழகு!!

மங்கையவள் மலர்மாலை சூடுகயில்
மேனி கொண்ட பொன்நகையை விட,
மெல்லிதழ் கொண்ட புன்னகையே பேரழகு!
நாதனிடம் நாள்தள்ளிப் போவதாகக் கூறி,
நங்கையவள் நாணுகையில் புன்னகை பேரழகு!!

அத்துனை அழுகையிலும் வலியிலும்
சேயின்? அழுமுகம் கண்டு சிரிக்கும்
தாயின் புன்னகை சொல்லமுடியாத அழகு!
பல்லில்லா மழலை கண்ணத்தில்
பல்லாங்குழி விழ சிரித்து,
பார்ப்போரையும் சிரிக்கச் செய்வது ஒப்பற்ற அழகு!!

ஒவ்வொரு மாதமும் சம்பளம் கண்ட
ஊழியருக்கு ஊக்கம் தரும் புன்னகை அழகு!
காதலி தன் காதலை ஏற்றுக்கொள்கையில்,
காதலன் முகத்தில் தோன்றும் குறுநகை அழகு!!

நண்பர்களுடன் அரட்டை அடிக்கையில்
மனம் விட்டு சிரிக்கும் புன்னகை அளப்பரியது!
வெற்றிச் செய்தி கேட்டவுடன் சட்டென்று
முகத்தில் எட்டிப் பார்ப்பதும் புன்னகையே

வேலை தேடி அலைவோர்க்கெல்லாம்,
தேடி வந்த வேலை தரும் மனம் நிறைந்த புன்னகையை!

சிலசமயம் புன்னகை பல ஆனந்தத்தை தாங்கி நிற்கிறது!
சிலசமயம் அதுவே பல பாரங்களையும் தாங்கி நிற்கிறது!!

மனிதன் பணம் கொடுத்து
வாங்காத ஒரே நகை புன்னகை!
அது இறைவன் மனிதனுக்களித்த வரம்!
புவியிலுள்ள மனிதர்களின்
புண்ணியத்திற்கு கிடைத்த பொக்கிஷம்!!

புன்னகையல்லாது மனிதன் இல்லை!
மனிதனில்லையேல் புன்னகையும் இல்லை!
புன்னகை என்று சொன்னாலே
புன்னகை தோன்றும்,
வேறென்ன வேண்டும் இப்பூவுலகில் ?

**கவிஞர் இராகேஷ்வரி ராஜகுரு,**
முதுகலை இயற்பியல் இரண்டாமாண்டு,
எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

## தூது

என் கோரிக்கைகளை நிறைவேற்ற உன்னை தவிர
வேறு யாரையும் தூதாக அனுப்ப முடியாது
உன்னிடம் அனுப்பவதற்கு
என்னிடம் பல தகவல்கள் உள்ளன
அவற்றில் சிலவற்றை கூறுகிறேன் நன்றாகக்கேள்
சங்க இலக்கியங்களை
சந்து பொந்துகளெள்ளாம் தூதாக கொண்டு செல்
தமிழ் மொழியின் பெருமையினை
தரணி முழுவதும் தூதாக கொண்டு செல்
கவிக்குயில்களின் கவிதைகளை
கண்டம் தாண்டி கொண்டு செல்
உலகப் பொது மறையை
உலகம் முழுவதும் கொண்டு செல்
மறத்தமிழன் பண்பாட்டினை மலைகளை கடந்து கொண்டு செல்
மதுரையில் கோவில் கொண்டவளின்? மாண்பினை
மண்ணுலகம் முழுவதிலும் கொண்டு செல்
சிற்றிலக்கியங்களின் சிறப்பினை
சிறியோர் முதல் பெரியோர் வரை கொண்டு செல்
பாவம் இங்குள்ள சிலருக்கு தமிழ்
படிக்க தெரியாதாம் அவர்களின்
செவிகளில் சென்று
செந்தமிழின் செம்மையை கூறு
அனைத்தையும் அவனி முழுவதும் சென்று சேர்த்து விடு பொழிலே
உனக்காக இங்கு ஒரு தமிழ் மகள் காத்துக் கொண்டிருக்கிறாள்

**கவிஞர் இராகேஷ்வரி ராஜகுரு,**
முதுகலை இயற்பியல் இரண்டாமாண்டு,
எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

## தூது

தூது அனுப்பா மனம் உண்டோ?
தூது செல்லா மனிதம் உண்டோ?
சொக்கநாதருக்காக தூது சென்ற தமிழே
அழகிய நடைக்கே தூது சென்று என்னைச் சொல் அன்னமே
அழகிற்கே தூது சென்று என்னைச் சொல் மயிலே
உன் சிவந்த மூக்கிற்கும் இனிய கவிப்பேச்சுக்கும் தூது செல்லும் கிளியே என் குரல் கேட்டு இதழ் பார்த்து
நிலவிற்காக தூது செல்லும் மேகமே இன்னும் எதை தேடி நகர்கிறாய்?
உயிரற்ற விலங்குகளை உண்ணும் புள் இனமே நீ யாருக்காக தூது சென்றாய்?
தலைவன் மீதான ஊடல் தீர சுயநலமின்றி தூது சென்ற சங்க இலக்கிய தோழிக்கு வேறு இணை உண்டோ...?
தன் சொந்தக் குரலை தூது அனுப்பிய குயிலே!
உறக்கம் இல்லா நள்ளிரவில் நினைவுப் பேழையின் வழியே தூது சென்ற நெஞ்சே!
இலையுதிர் காலத்துக்காகவா தூது செல்கிறாய் தென்றலே?
புவியில் வட்டமிட்டு வானில் விட்டமிட்டு திரியும் வண்டே
தூது சென்ற காரணம் உண்டோ?
இன்று தொலைந்துபோன தொலைதூர உறவுகளைப் புலனம் வழித் தேடி பொழுதுபோக்குகளுக்கு தூது சென்ற வலையொளியே...
முகம் தெரியாத நண்பர்களுக்காக தூது சென்ற முகநூலே
இயங்கலையில் நுழைந்தோம் தொலைவரியை தேடி நட்புகளுக்கு தூது அனுப்ப கிடைத்தது படவரி....
தொலைதூர தேடல்களுக்கு தூது செல்லும் பற்றியமே நீயின்றி சில நொடிகள் அணுவும் அசையாது
அஃறினையோ உயர்தினையோ தூது வடிவாகவே
பயணிக்கிறது மனித இனம்....

**கவிஞர் க. காயத்ரி**
வெள்ளூர்

## உண்ண உழவு செய்

உழவின்றி உலகில்லை!
உணவின்றி மனிதனில்லை!
மனிதனின்றி மகத்துவம் இல்லை
ஏர்க்கலப்பை கலத்தில் பூட்டி,
சொட்டு வியர்வை நிலத்தில் சிந்தி,
திக்கற்ற திசையில் திகையடிக்கும்
வெயிலில் உழவு செய்து,
மண்ணைக்கிளறிப் பதம்பார்த்து நெல் தூவி,
பொழியும் வானத்தை எதிர்பார்த்து பயிர் செய்து,
புனல் பாய்ச்சி, உரமிட்டு, களை அகற்றி நாற்று நட்டு
பிள்ளைப் போல் பராமறித்து
அறுவடை செய்யும் அகிலம் போற்றும் உயிரொளி உழவனே!
செய்தொழில் மறந்து வளரும் தொழிநுட்ப வளர்ச்சியே
அறிவியல் தேடலில் அறம் மறந்து,
செயல் மறந்து தடம் மாறும் இனமே!
விஞ்ஞானம் பழகும் மானிடரே,
விவசாயம் பழக முயலுங்கள்...
சுழன்றும் ஏர்பின்னது உலகம் என்பதே காரணம்...
விஞ்ஞான வளர்ச்சியிலே உச்சம் தொட்டு
விவசாய வளர்ச்சியிலே சொச்சம் தொடுங்கள் போதும்..
மருத்துவர், பொறியாளர்கள் எல்லாம்
மாளிகையில் குடியேறி உணவளித்த
தமிழ்க்கூட்டம் காரைவீட்டில் குடியேறியது
அச்சாணி இல்லா வண்டி தடுமாறுவது போல
உழவில்லா உலகம் தடுமாறி தடமாறும்.....
துரித உணவுகளெல்லாம் வித்திடுகிறது
வெற்று சமுதாயத்திற்கும், வெவ்வேறு நோய்களுக்கும்

அதை உயர்வென்று எண்ணி உண்ணுகிறோம் நாளும்..
படிப்பறிவு இல்லாதவரின் தொழில் என எண்ணி,
படிப்படியாக குறைகிறது பட்டங்கள் பல பெற்றாலும்,
சட்டங்கள் கற்றாலும்,
பக்குவமாய் வளர்ந்து பாரினிலே உயர்ந்ததாலும்,
வானிலே பறந்து வலம் வந்தாலும்
ஏவுகணைகள் பல அனுப்பி சோதனைகள் செய்தாலும்,
ஆரோக்கிய வாழ்வுக்குத் தேவை உணவு.....
உணவுக்காக உழவு செய்து,
உழவர்க்கு உயர்வு செய்து,
விவசாயம் காக்க வழிவகை செய்தவோம்..

.

**க.காயத்ரி**
வெள்ளூர்

# அன்பின் அலைகள்

அலையானது ஆரவாரித்து மண்ணை குளிரச் செய்வதுபோல்
தாயின் அன்போ என்னை குளிரச் செய்கிறது

அலைகள் மீண்டும் கடலை நோக்கி திரும்பினாலும்
கடலோ அதனை ஏற்க மறுப்பதில்லை
அதுவோ தாயின் அன்பு

வாழ்க்கையோ கடலைப் போன்றது
அதில் ஆரவாரித்து வரும் அலைகளாகிய
ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும்

நான்கில் பெரும்பங்கு
நீ இருப்பதைப்போல்
வற்றாத கடல் தாயின் அன்பு இருக்கிறது

தரணியில் தடம் பதிக்க செய்த
தாயினை நான் தலை நிமிரச் செய்வேன்

மிகுதியளவு இல்லை என்றாலும்
பகுதியளவு பாதம் பதிக்க செய்த
என் தோழியின் அன்போ அகிலத்தையும் கடந்தது

கடலோ அலை அடிக்க மறுப்பதில்லை
அதுபோல் ஒரு அன்பு வேண்டும் எனது வாழ்வில்

கல்வி என்னும் கடலில் மூழ்கினேன்
எனது முத்தாகிய வெற்றியை எடுக்க

பொழில் பண்பலை என்னும் கடலுக்கு
கவிதை அலைகளை உனைநோக்கி
அனுப்பிக் கொண்டே இருப்பேன்

காதோரம் அன்பு என்னும் சத்தம்
எனது மனதிலோ புன்னகை
என்னும் யுத்தம் அலைகளாக ஆர்பரிக்கிறது

இருக்கும் பணியில்
இடைவெளியின்றி இன்பம் பல பெற்று
இனிதே செய்திடுவோம்

வானம் பார்த்து காத்திருக்கும் பூமியைப்போல்
எனது வாழ்வில் வெற்றியின் வருகைக்கு காத்திருக்கிறேன்

அசைந்து ஆடும் மரக்கிளைப்போலும்
ஆரவாரிக்கும் அலையைப்போலும்
எனது வாழ்வில் அன்பானது ததும்பட்டுமே

வண்டுகள் மலர்களில் தேனை தேடுவது போல்
எனது வாழ்வின் வெற்றியைத் தேடுகிறேன்
வெற்றியோ தேனைப் போன்று இனிக்கட்டுமே.....

நன்றி பொழிலே

**கவிஞர் க. செல்வகாமாட்சி**
மூன்றாம் ஆண்டு தமிழ்
வெள்ளூர் சிறுவரை

# அன்னை மொழி

அன்னை மொழியே...
அன்னை மொழியே....
கருவில் சுமக்காமல் தாய்மை அடைந்த கன்னித்தமிழே!
அரும்பெறும் இரு குழந்தை பெற்றெடுத்தாயே அன்னை மொழியே....
பெற்றெடுத்த ஒரு குழந்தையோ புலவனின்
நாவில் நின்று நயம் பாடவைத்தாய்......
மற்றொரு குழந்தையோ நயம் பாடுவதற்கான
பாடலை வடிவமைத்தாய்
பாடும் குழந்தையோ எதுகை மோனை
முதலா இலக்கிய நயங்கலோடு பல பாட்டு பாடினாய்...
வடிவம் கொடுத்த குழந்தையோ
எழுத்து சொல் முதலா
ஐம்பெரும் இலக்கை கொண்டு பல பாட்டு வடிவமைத்தாய்.....
பாடும் குழந்தையோ இலக்கை இயம்பும் இலக்கியம் என பெயரிட்டாய்
பாட்டு அமைத்த குழந்தையோ
இலக்கை அயனம் செய்யும் இலக்கணம் என பெயரிட்டாய்.....
இவ்வாறு உன் இரு குழந்தையை
என் போன்ற கவி பாடும் கவிஞருக்கு தந்து
கவிபாட வைத்த அன்னை மொழி
நீ என்றும் என் அன்னையே.!!!!!

நன்றி பொழிலே!!

**கவிஞர் :சு.சிவராமன்**
இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு ,
செய்யானம்.

## தலங்கரை விளக்கம்

கடலின் கலங்கரை விளக்கம் மீனவர்களுக்கு வழி காட்டும்
தோல்வியின் கலங்கரை விளக்கம் வெற்றிக்கு வழி காட்டும்
உதவியின் கலங்கரை விளக்கம் ஊக்கத்திற்கு வழி காட்டும்
செல்வத்தின் கலங்கரை விளக்கம் ஈகைக்கு வழி காட்டும்
கல்வியின் கலங்கரை விளக்கம் அறிவிற்கு வழி காட்டும்

அறிவின் கலங்கரை விளக்கம் ஆற்றலுக்கு வழி காட்டும்
ஆற்றலின் கலங்கரை விளக்கம் உழைப்பிற்கு வழி காட்டும்
உழைப்பின் கலங்கரை விளக்கம் உயர்வுக்கு வழி காட்டும்
உயர்வின் கலங்கரை விளக்கம் தன்மைக்கு வழி காட்டும்

தன்மையின் கலங்கரை விளக்கம் மதிப்பிற்கு வழி காட்டும்
மதிப்பின் கலங்கரை விளக்கம் மதிப்பிற்கு வழி காட்டும்
இளைப்பாராமல் வீசும் கலங்கரை விளக்கின் ஒளியென
நாம் நம் முயற்சியை கொடுத்து
எல்லையில்லா இன்பம் அடைவோம்!

நன்றி பொழிலே!!

**கவிஞர் சு.சிவராமன்**
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
செய்யானம்

## புதுமைப்பெண்

இடை தெரியும் ஆடை அணிந்து
இழிவான சொற்கள் பேசி
அழகிய மயிரை வெட்டி
அதில் பல வண்ணம் தீட்டி
தினம் ஒரு காதல் செய்து
தெருவெங்கும் சுற்றிக் கொண்டு
மனம் போகும் போக்கிலே
மந்தி போலத் தாவித் திரிந்து
குணம் யாவும் கெட்டழிந்து
கூடாத நட்பு வைத்து
வேண்டாத செயல்கள் செய்து
வெட்கித் தலைக்குணிவதா புதுமை?
கஞ்சமில்லா முகத்தில் மஞ்சள் பூசி
கருங்கூந்தலில் மலர் சூட்டி
வாசலில் கோலம் தீட்டி
வந்தோரை வரவேற்கும் இரு கைகூப்பி
மங்களம் பூண்ட முகம் காட்டி
சஞ்சலம் இல்லா மனம் காட்டி
பசியாற்றும் சொல் பேசி
ருசியான உணவாற்றி
வாசல் வந்து வழியனுப்பி இனி வரும் நாட்களுக்கு
ஏங்கும் பழமை எங்கே?
புதுமைப்பெண் செய்தாள் என்னற்ற சாதனை
பழமையைக் கொன்றாள் அதுவே இங்கு வேதனை
பாரதி கேட்ட புதுமையும் இதுவல்ல
பைந்தமிழ் கேட்கும் புதுமையும் இதுவல்ல!

எங்கே போனாய் புதுமைப்பெண்ணே உனை
இங்கு தேடுகிறேன் தமிழ்நாட்டில்!

நன்றி பொழிலே!

**கவிஞர் ஆ.நவீன்குமார்**
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
மேலக்காவனூர்

## கார்காலம்

இருண்ட வானம்
இதமான காற்று
திரண்ட மேகம்
தினமும் மழை
ஓட்டுத் தண்ணீரில்
வீட்டுக் குடங்கள்
ஒழுகும் குடிசையில்
பாத்திரங்கள்
காகித ஓடம்
கணமழையிலும் ஓடும்
கட்டைக் குரலில்
தவளைகள் பாடும்
நடவுப் பெண்களின்
நல்ல இசை
சேர்ந்துப் பாட
எனக்கும் ஆசை
சேற்றில் பிடித்த நண்டு
சேலையில் பிடித்த
மீன் ஒருநாள் வாழும்
ஈசல் அரிசியோடு
அடுப்பில் வருவல்
மழையிலும் நிற்காத ஆட்டம்
அம்மாவைக் கண்டதும் ஓட்டம்
நனைந்த மரத்தின்
கிளையை இழுத்து
நண்பனை நனைத்தக் காலம்
விட்டு விட்டுப் பெய்யும் மழையத்
தொட்டு தொட்டு
இரசித்த கார்காலம் இளமையின் பொற்காலம்
நினைக்கும் போதே மனதில்
பூக்கோலம்!
நன்றி பொழிலே!

**கவிஞர் ஆ.நவீன்குமார்**
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
மேலக்காவனூர்.

# அன்பின் அலைகள்

சாலை ஓரம் சாமங்கிப்பூ மாலையும்
சாமந்திப்பூ வாசமும் வாடாமல் விற்கும்,
சாந்தி அக்காவின் முகத்தில்
சிவந்திடும் சிரிப்பு!
சீனிமிட்டாய் கேட்டதற்குத் தேடிபிடித்து
கடலை மிட்டாய் எடுத்து தரும்
காது கேட்காததை முகத்தில் காட்டாது,
கனிவாய் சிரிக்கும் கனகுபாட்டி!
எரிந்து பாதி புகைந்து பாதியும்,
எரியும் அடுப்பில் பாலைக் காய்ச்சி,
எப்போதும் நான்குபேர் கடையில் அமர்திருக்கும்,
எங்கள் ஊர்டீக்கடை செல்வா தாத்தாவின்,
மூன்று டீ நான்காக இரகசியம் கேட்டால்,
முறுவல் கொண்ட முகமே
தாத்தாவின் அடையாளம்!
தாவி ஆடி விளையாடிய போது,
தடுக்கி விழுந்ததை பார்த்து,
காயம்பட்ட இடத்தில் மருந்து பூசி,
கடுஞ்சொல்லால் அம்மா பேசிய வேளையில்,
சரிவிடுங்களென சமாதானம் செய்யும்,
சலங்கை குரல் சத்யா அத்தையின்,
சரிந்திடாத அன்பு அழகு!
அன்போ வாழ்வில் அன்றாடம் அடிக்கும்,
அலைகளை போல அவைகளில்,
காலினை நனைத்து மகிழ்வதும்,
கரையோரம் இருந்து துகில்வதும்,
அவரவர் கைகளிலே,
அகிலத்தில் அலைகளோ அடித்துக் கொண்டேவிருக்கும்,
நம்மில் பலருக்கு
நம்மால் பலருக்கு
"அன்பின் அலைகள்"
நன்றி பொழிலே

**கவிஞர் .வி.அகல்யா,**
இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு, பனஞ்சேரி.

## யாதுமாகியவள்

அன்பின் முதல் கருவாய்,
அழகின் மறு உருவாய்,
ஆதவனின் ஒளியென ,
ஆதிஅந்தம் இவளென,
வண்டலின் வளமாய்,
வார்த்தையில் பொருளாய்,
வலிகள் தீர்க்கும் மருந்தாய்,
வாழ்வை வர்ணிக்கும்
பெண்குலமே!
தினமும் ரணமாய்
ரணமும் வனமாய் இருப்பினும்
கணமும் கலங்காது,
காகிதப்பூ மென்மையே,
கவிபாடும் பெண்மையே,
காலம் காட்டும் உண்மையே!
தன்னை மரம் உதிர்த்த இலையென எண்ணும்,
தன்னம்பிக்கையற்ற மனிதனுக்கு தான்
மரம் உதிர்த்த இலையில் ஒட்டியிருந்த ,
மாற்றங்கொண்ட விதையென ,
முளைத்திடும் விடியல் சுடரொளியே!
அன்பில் அன்னையாய்,
தன்மானத்தில் தமக்கையாய்,
தன்னடக்கத்தில் தங்கையாய்,
மரணமும் பங்கு கொள்ளும் மனைவியாய்,
மறுத்து பேசிடயியலா

மகளாய்,
மகளீர் என்னும் மலரே!
மனிதன் மண்ணில் நடை பழகியது முதல்,
மரணம் வந்து தழுவும் வரை,
தரணி தனைத் தாங்கி நிற்கும்,
தன்னம்பிக்கைத் தாரகையே!
எங்குமாகிறாள் விழிமுழுக்க,
எதுவுமாகிறாள் மனமுழுக்க,
யாவுமாகிறாள் வழிமுழுக்க வண்ணங்களாய்.

நன்றி பொழிலே

**கவிஞர்.வி.அகல்யா,**
இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு,
பனஞ்சேரி.

## பட்டிக்காடு

பனை ஓலை வேய்ந்த வீடு _ அதில்
சிட்டுக்குருவிக்கோ ஒரு கூடு!
வாசலிலே ஏர்பூட்டிய காளை மாடு
உழத்தி கஞ்சிக்களையத்தோடு
தலையில் சும்மாடு!
வயல்காட்டில் நல்ல நாட்டுப்புறப் பாடல்
அதிகாலை முதல் அந்தி மாலை வரை
உழைப்பின் தேடல்!
வேனிற் காலம் வந்ததும்
குளிர்சாதனப்பெட்டி இல்லாமல்
குயவன் செய்த பனையிலே
குளிர்ந்த நீர்!குளிர்ந்த மோர், இளநீர் ,நுங்கு கிடைப்பது
பட்டிக்காட்டை விட வேறு எங்கு?
சுட்டெரிக்கும் வெயிலிலும் சிறுவர்கள் விளையாட்டு
பதறி ஓடுவார்கள் அன்னையின் குரல் கேட்டு !
அன்னை மரத்தினில் தொட்டில் கட்டி தாலாட்டுவதும்
இரவினில் நிலாவினை காட்டி சோறு ஊட்டுவதும்!
இன்றும் பட்டியில் உண்டு சிட்டியில் உண்டோ?

நன்றி பொழிலே!

**கவிஞர் க. தெய்வீகன்**
இளங்கலைத்தமிழ்
இரண்டாம் ஆண்டு
கீழ்கரை!

# மூடுபனி

கண் விழித்ததும் ஆகாய வெண்மேகம்
அருகில் வந்தது போல் காட்சியளிக்கிறாய்!
ஒவ்வொரு துளியாய் நீ புற்களில் விழுந்து
அழகாய் இதயம் பறிக்கிறாய்! பிறகு ஏனோ?
ஆயிரம் துளியாக வந்து அண்டை வீடு மறைக்கிறாய்!

வாழ்க்கை ப்பாதையில் தான் தடை என்ற போது
வாகன ப்பாதையிலும் தடை செய்கிறாய்! வரும்போது
உன் தோழனான வாடைக்காற்றையும் அழைத்து வந்து
மெய்சிலிர்த்து வாடச் செய்கிறாய் !
இது உன் கோபமா? அல்லது கொண்டாட்டமா?
என்று தெரியவில்லை ஒவ்வொரு துளியாய்
தினமும் வா அழகாய் தெரிவாய் !
ஒரு நாளும் திரளாக வராதே
ஆபத்துதான் விளைவிக்கிறாய்!

நன்றி பொழிலே!

**கவிஞர் க. தெய்வீகன்**
இளங்கலை த்தமிழ் இரண்டாம் ஆண்டு கீழ்கரை.

## அழகென்பது எது

காலையில் சூரியன் உதிப்பதும்
மாலையில் சூரியன் மறைவதும் அழகு....
இரவில் நிலவின் அழகினை இரசித்து
கவிஞர் கவிதை எழுதுவது அழகு....
நான் கேட்டு இரசிக்கின்ற இசையும் அழகு....
தோல்விக்கு துணிந்து நின்று வெற்றியை அடைவது அழகு....
பூவோடு பேசுகின்ற காற்று அழகு....
கடலில் கிடைக்கின்ற முத்துக்கள் அழகு....
வயலில் இருக்கின்ற வரப்புகள் அழகு...
பூக்களின் வாசமும்...
பூக்களை சுற்றி வண்டுக்கள் மொய்ப்பதும்...
மரத்தில் இலையுதிர்காலம் முடிந்து
புது இலைகள் துளிர்ப்பதும்....
நீரோடையில் மீன்கள் துள்ளி குதிப்பதும்....
தென்னங்குருத்தும் வாழைப்பூவும்....
பழங்களின் சுவையும்...
குழந்தையின் மழலை பேச்சும் ...
தமிழர்களின் பண்பாடும்...
மன்னர்களின் ஆட்சி திறமையும்...
மனிதர்களின் அன்பும்...
பிடித்தவர்களிடம் மட்டும் வெளிப்படுத்தும் கோபமும்....
பறவைகளின் கூடும்... எறும்புகளின் வரிசையும்...
மயிலின் கண்ணும்... துள்ளி குதிக்கும் மானும்...
இவ்வளவு அழகிருக்க எதை நான் சொல்வேன்!!....

நன்றி பொழிலே

**கவிஞர் து. நர்மதா துரைச்சாமி**
இரண்டாம் ஆண்டு இயற்பியல்
வீரமங்களம்

## முகமூடி

உள்ளத்தால் மடித்து.. கைக்குட்டையால் மறைத்து..
கண்களில் பயத்தோடும்...
உள்ளத்தில் பதற்றத்தோடும்..
அவிழ்ந்து விழுந்தால் அவமானம்..
மறைத்து வாழ்ந்தால் பிணி..
மற்றவர்களுக்காக நடித்து பிடித்த வாழ்க்கை வாழாமலும்
வருகின்ற பெரிய பிணி...
மனதில் தோன்றியதை பேசினால்...
நீ பேசிய வார்த்தைகளே உனக்கு பின்னால்
வலியைத் தரும் என்பதினால் தான் மறைத்து வாழ்கின்றாயோ?
ஆரம்பத்தில் அன்பைக் கொடுத்து
முடிவில் கஷ்டத்தை தருகின்ற உறவுகளை விட
முகமூடியோடு வாழ்ந்திடலாம்....
உலகத்தில் அனைவரும் முகமூடியோடு தான் வாழ்கின்றோம்...
நம்முடன் பேசுபவர்கள் நடித்து வாழ்கையில்
நாமும் நடித்தால் தவறென்ன?
அன்பை மறைத்தும் அன்புக்காக ஏங்கியும்
முகமூடியோடு வாழ்கின்றோம்...
உலக என்னும் நாடக மேடையில் முகமூடியோடு நடிக்கின்றோம்...
நான் முன்னேறினால் பிறரின் உள்ளம் அழுக்காறு கொள்ளும்..
முகத்தில் புன்னகையில் என்னும் முகமூடியோடு...
விடை தெரியா பறவைகளாய்.....

நன்றி பொழிலே

**கவிஞர் து.நர்மதா துரைச்சாமி**
இரண்டாம் ஆண்டு இயற்பியல்
வீரமங்களம்

## தூது

முயற்சியைத் தூது அனுப்பினேன்
என் வெற்றியைக் கொண்டு வா என்று.....
மலரின் வாசத்தைத் தூது அனுப்பினேன்
காற்றோடு கலந்திடாமல் கனவைக் கொண்டு வா என்று.....
அன்னப்பறவையைத் தூது அனுப்பினேன்
சரஸ்வதி தேதியிடம் கல்வி அறிவைக் கொடுக்க வேண்டுமென்று.....
மெல்லிசையைத் தூது அனுப்பினேன்
என் மனம் இளைப்பாற வேண்டுமென்று.....
விண்மீன்களை தூது அனுப்பினேன்
ஒன்று கூடி ஒளி தரக் அதில்
என் புன்னகையை சேர்த்துக் கொள் என்று.....
கவிதையிடம் தூது அனுப்பினேன் கனவு நிறைவேற கோரி.....
இதயத்திடம் தூது அனுப்பினேன்
உன் துடிப்பை நிறுத்தி விடாதே
இன்னும் இலக்கை அடைய காலம் வரவில்லை என்று......
கவிஞர் எனும் அடையாளத்தை கொடுத்ததற்கு
பொழில் பண்பலைக்கு தூது அனுப்பினேன்
நன்றி கூற வார்த்தை இல்லையென்று......
பேருந்தினுள் சாளரத்தின் வழி காணும் போது
பின்னோக்கிச் செல்லும் மரங்களிடமும்
உலக இருள் போக்கும் கதிரவனிடமும்
தன் பிரகாசத்தை இருளில் அளிக்கும் சந்திரனிடமும்
தெற்கு திசை நோக்கி வீசும் தென்றலிடமும்
கீழ் நோக்கி விழும் மழைத் துளிகளிடமும் கேட்கிறேன்
உங்கள் சுழற்சி மாற்றியமையும் போது செல்லுமோ?
கடவுளிடம் என் தூது.....

நன்றி பொழிலே.....

**கவிஞர்: இதயா பழனிச்சாமிக்**
இரண்டாம் ஆண்டு இயற்பியல்க்
சிலட்டூர்.

## பயணம்

தொடங்கியது என் வாழ்க்கை பயணம் கருவில் இருந்து...
தொடங்கினேன் என் லட்சிய பயணம் கவிதைகளில் இருந்து.....
கண்களுக்கு பசி எடுத்து விட்டதோ நான் பயணிக்க பயணிக்க....
சோர்வில்லை என் பயணம் மரணிக்க மரணிக்க.....
விடை கிடைக்குமா என் விடுகதைக்கு சிப்பிக்குள் முத்து போல.....
பிரயாணத்தை முடிக்க மாட்டேன் மரணம் வரும் வரை
கலைந்து விடாமல் காவல் செய்வேன் கனவு பயணத்தை....
ஒவ்வொரு நாழியும் காதல் செய்வேன் லட்சிய பயணத்தை....
என் வாழ்க்கை பயணம் முடிந்தாலும்
என் கவிதை பயணம் முடியப்போவதில்லை....
இதயம் குளிரக் மனம் நிறைய கனவு
மெய்ப்படக் தொடங்குகிறேன் என் வாழ்க்கை பயணத்தை.....
விமர்சனமெனும் பயணச்சீட்டைப் பெற்றுக்
தோல்வியெனும் படிகளில் ஏறிக்
முயற்சியெனும் பேருந்தை செலுத்திக்
செல்கிறேன் வெற்றிப் பயணம் நோக்கி.......

நன்றி பொழிலே....

**கவிஞர் இதயா பழனிச்சாமி**
இரண்டாம் ஆண்டு இயற்பியல்
சிலட்டூர்.

## எல்லாம் நன்மைக்கே

கண் இமைக்கும் நொடிகளில்
கவி பாடும் தருணத்தில்
திரு என்று நாமத்தை உச்சரித்து
திருக்குறளை படித்து உணரும்
காலம் வருவதும் நன்மைக்கே...

ஒருவேளை உணவும்
ஒற்றுமை மாறா சிறப்பும்
ஒருமைப்பாட்டின் தாயகம்
மும் மதமும் போற்றும் காலம்
வருவதும் நன்மைக்கே...

சாதி மதத்தை அழித்தும்
சமத்துவம் போற்றும்
காலம் வருவதும்
நன்மைக்கே...

தமிழனை நினைத்து
தமிழ் மொழியை வளர்த்து
தமிழ் மொழி தலை தூக்கும் காலம் வருவதும்
நன்மைக்கே...

ஏழைகளின் பொய்கை சிரிப்பும்
எமனின் எள்ளி நகையாடலும்

ஏழை ஏழையாக இருக்கின்றான்
பணக்காரன் உயர்ந்து கொண்டே போகின்றான்..
இந்நிலை மாற காலம் வருவதும்
நன்மைக்கே...

ஏழைகளின் இந்நிலை மாறி
புன்னகைக்கும் காலம் வருவதும் நன்மைக்கே...

மனிதன் என்ற ஓர் இனம் அதனை
மதித்து போற்றும் காலம் வருவதும் நன்மைக்கே....

நன்றி பொழிலே

**கவிஞர் அ. ஜியாவுதீன்**
கோதைமங்கலம்

## அன்னை மொழி

அல்லல்ல குறையாத சிறப்பும்...
என் தாயின் அரவணைப்பும்...

முக்கடல்கள் சங்கமித்து
முச்சங்கும் நின்றொழித்து
மும் முரசும் கொட்டி முழங்க
முச்சங்கங்கள் வைத்து
வங்காள முதல்
குமரி வரை உன்
புகழைப் பாட
வரிகள் எங்கும் இல்லை...

குமரியில் பிறந்து
அண்டமெல்லாம் வளர்ந்து
உலகெல்லாம் வியந்து
போற்றும் அன்னையே!!

தித்திக்கும் திண்ணை பள்ளியில்
தேன் சுவை ஊட்டியவளே!!
உயிரும் மெய்யுமாய் கலந்து
தமிழினை உணர்த்தியவளே!!
கனவையும் நனவையும் தமிழ்
கவிதையாக தந்தவளே!!
நான் கண்ட மொழிகளில்
என் அன்னை மொழியைப் போல்
உலகில் எங்கும் காணோம்....

நன்றி பொழிலே

**கவிஞர் அ. ஜியாவுதீன்**
கோதைமங்கலம்

## கலாச்சாரம்

தொட்டில்
மையிட்டு
பெயர் சூட்டி
பொத்தான் இட்டு
குலதெய்வம்
வணங்கி
குலம்காக்க
குரல் ஒலியெழுப்பி
ஆட்டம்
பாட்டும் போட்டு!
பூப்பு எய்தி!
பூமாலை ஈட்டு
புன்னகைத்து!
பெண் பார்த்து
கண்ணும் கண்ணும்
கலந்து
கருவுற்று
மாதம் சுமந்து
குழந்தை என்று
மீண்டும்
மீண்டும்
பேனிகாத்து
பொக்கிஷம் டா
தமிழரின்
கலாச்சாரம்!
கிழபருவம் எய்தி
மண்ணுக்குள் போகும்வரை!
வாழும்!
தமிழரின்
கலாச்சாரம்!

**முனைவர் நா. தீபாராணி**

## காப்பியம்

குட்டி கதையை உள்
வைத்து யாப்பு
குறையாமல் பாடல் இசைத்து!
குடிமகளை தலைவியாகி!
நீண்டதொரு பாட்டி இசைத்து!
உரைநடைக்கு வித்திட்டு!
கையில் சிலம்பு தந்து வாதிட்டு!
வண்ணமயில் வாடிநின்று!
மலைமுகடில்
குடிபுகுந்து!
சேரன்?காண!
சிலை வடித்து!
நண்பன் கதைகலை
கவிதைப்பட!
எழுதிய பா மாலை!
சீர்மிகு மண் பூமாலையின்
காவிய கதை
கண் கலங்க வைத்த
சிலப்பதிகாரம் என்னும்
சீர்மிகு
நாட்டிய காப்பிய
அமுதம்!
கல்லை கண்டவன் சிலை வடிபான்!
போரை கண்டவன் வீரம் படைப்பான்!

**முனைவர் நா. தீபாராணி**

# கொண்டல்

வீசுகின்ற திசைகொண்டு காற்றுக் கெல்லாம்
        வியப்புறவே வேர்வைத்தார் நமது முன்னோர்
மாசில்லா செந்தமிழில் கிழக்கைச் கொண்டு
        மழையேந்தி வருவதுவிய கொண்டல் ஆகும்
பேசுகின்ற வகையாலே இலக்கி யத்தில்
        பெருமைபடத் திகழ்வதுவே இச்சொல் என்றும்
ஆசுகவி கவிதையினைப் பொழிதல் போல
        அடுத்துவீசும் கொண்டலினால் நன்மை கூடும் !

நீரின்றி அமையாதே ஞாலம் என்ரே
        நிறைவாக வள்ளுவனார் அன்றே சொன்னார்
வேர்விட்டுப் பயிரேதும் வாழா திங்கே
        வேண்டுகிற உணவுக்கும் கதிதான் ஏது?
யாரிங்கே ஆட்சியினைச் செய்தால் என்ன
        யாவர்க்கும் பொதுவான மழையே வேண்டும்
பேருண்டே அதற்குத்தான் கொண்டல் என்று
        பேரின்ப பலவார்க்கும் பெய்யப் பெய்ய !

வானத்தின்  சேயென்றே உலவும் எங்கும்
        வடிவங்கள் பலவற்றால் சிந்தை அள்ளும்
தானத்தை தருகின்ற வடிவ மாகி
        தடையின்றித் தான் பொழியும் மேகம் தானே
தான்குளிரப் புவியிதனைச் செழிக்கச் செய்யும்
        தனிச்சிறப்பாய்ப் பருண்டு கொண்டல் என்றே
தாந்தூதாய்ச் செல்வதுண்டே இலக்கி யத்தில்
        தாவணிய்போல் தான்ணியும் வான்ம் தானே !

**சோ. கு. செந்தில்குமரன், ஆசிரியர்**
புதுச்சேரி

## மாலை

பார்போற்றும் புகழுக்கு மாலை யாக
          பண்ணிசையும் இயலோடு கூத்து மாகும்
வேரூன்றி வளர்கின்ற பயிர்கள் யாவும்
          வியப்புறவே தரும்பூவும் மாலை யாகும்
கார்மேகம் கூடுகிற வானம் மீது
          காணுகிற மாலைதான் வான வில்லே
போருக்குச் சென்றாலும் வெற்றி பெற்றே
          பேருவகை கொண்டேதான் அணிந்தார் மாலை

வகைவகையாய் மாலைகளே தமிழர் வாழ்வில்
          விரவித்தான் இருந்தெல்லாம் வரலாற் றுண்மை
தொகுத்தவைகள்சங்க கால மேன்மை சொல்லும்
          தோள்தட்டிப் பெருமைகொள வீரம் வெல்லும்
நகையினும்நன் மாலைகட்கு மதிபே உண்டு
          நன்மண மேடைக்கோ இணைப்புப் பாலம்
தகைசான்ற சான்றோரின் கழுத்திற் கென்றும்
          தக்கதொரு நல்லணியாய் அதுவே மாறும்

முயற்சிக்குப் பரிசெனிலோ வெற்றி யாக
          முழுமையாய் அதையாக்கும் வாழ்த்து மாலை
பயிற்சிக்கு வேர்வைதான் கூலி யானின்
          பழுத்திட்ட அனுபவமே மாலை யாகும்
செய்கின்ற செயலெல்லாம் நேர்மை யானால்
          செகத்துள்ளோர் வாழ்வதெல்லாம் மாலை தானே
தொய்வின்றி உழைப்போரின் வாழ்வில் என்றும்
          தொடர்ந்தேதான் சூழ்ந்துடிமே வெற்றி மாலை !

**சோ. கு. செந்தில்குமரன், ஆசிரியர்**
புதுச்சேரி

## கவித்தூரிகை

என்
கடிதப் பூக்கள்
காகிதப் பூக்கள் அல்ல
காலத்தால் அழியாத
காதலெனும் காவியத்தின்
கவின்மிகு கல்வெட்டுகள்

நீ
முழுமதியாய் ஒளிரும்போது
தொட்டுவிடத் துடிக்கும்
என் கரங்கள்

நீ
இறங்கி வந்தபோது
உன் அருமை
எனக்கு புரியவில்லை

இன்றோ
உனக்கும் எனக்கும்
ஒரு காத தூரம்

இருப்பினும்
பெருமையாய்
சொல்லிக் கொள்கிறேன்
அந்த வானத்து நிலா எனக்கு
பூர்வீக சொந்தம் என்று ...

**ராபியா ஜேஎம்சி**
திருச்சி

## பட்டிக்காடு

பட்டிக் காட்டான் வாழ்வைக் கொஞ்சம்
எட்டி நின்னுப் பாத்துக்கோ!
விட்டுக் கொடுக்கும் குணத்தை நீயும்
கிட்டே வந்து கேட்டுக்கோ !
கட்டுக் கட்டாய் பணத்தைக் கண்டால்
துட்டு துட்டாய் மாற்றுவர்
பட்டுப் போன குடும்ப மக்களைக்
கெட்டுப் போகாது தேற்றுவர்!
நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சிக் கொண்டு
கொஞ்சிக் கொஞ்சி மகிழுவர்
வஞ்சம் என்ற எண்ணம் வந்தால்
பஞ்சாய் ஊதி விரட்டுவர்!
முட்டு முட்டாய் தானிய வகைகள்
கொட்டிக் கிடக்கும் மூலையில்
வீட்டை நாடும் உறவுக்கு அள்ளி
மூட்டைக் கட்டும் வேளையில்
அக்கம் பக்கம் உள்ள உறவைத்
தக்க வைக்கும் விதத்திலே
சொக்க வைக்கும் பண்ட வகைகள்
தூக்கிச் செல்லும் அழகைப்பார்!
எல்லா உயிர்க்கும் பகிர்ந்து கொடுக்கும்
நல்ல மனிதர் அங்குண்டு
கல்லாய் விளங்கும் மனதைக் கூட
புல்லாய் வளையச் செய்வரே!
பட்டிக் காடு என்று சொல்லி
சுட்டி ஏளனம் செய்யாதே!
கட்டிக் காக்கும் அவர்கள் பண்பை
புட்டு வச்சு வையாதே!

நன்றி

**கா.பூங்குழலி,**
புவனகிரி,

# காகிதப் பூக்கள்

பட்டாம் பூச்சிக் கூட்டம்போல்
முட்டாய் மலர்ந்து சிரிக்குதே!
கிட்டே சென்ற பறித்திடவே
முட்டி முள்ளும் கீறுதே!
விட்டில் பூச்சிக் குடிலமைத்து
தொட்டில் கட்டி உறங்குதே!
தென்னங் கீற்றாய் இதழ்களுமே
தென்றல் வீசக் கிறங்குதே!
பஞ்சு மிட்டாய் வண்ண மலர்
நெஞ்சைக் கொள்ளை அடிக்குதே!
எஞ்சி இருக்கும் வண்ணமலர்
கொஞ்சம் போட்டிப் போடுதே!
வாசம் இல்லாமல் மலர்வதாலே
பாசம் இல்லாமல் போகுதே!
வாசல் ஓரம் பூத்தபூவும்
வீசும் காற்றில் பறக்குதே!
கொத்துக் கொத்தாய் மலர்ந்துதானே
நித்தம் பூத்து சிரிக்குதே !
செத்து விழும் மலர்கூட
புத்தம் புதிதாய் தெரியுதே!
வாசம் இல்லா மலரைப்போல்
வேடம் போட சிலருண்டு !
வண்ணம் கண்டு மயங்கிடாமல்
எண்ணம் கொண்டு வாழ்ந்திடு!

நன்றி
**கா. பூங்குழலி,**
புவனகிரி,
கடலூர் மாவட்டம்.

## யாதுமாகியவள்

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற தமிழ் புலவனின்
தமிழில் நின்றவள்...

இரண்டடியில் இவ்வுலக நெறியை அளந்த
வள்ளுவனின் விரலில் நின்றவள் ...

திருவாசகத்திற்கு மறுவாசகம் இல்லை என
நிரூபித்த மாணிக்கவாசகரின் மனதில் நின்றவள்...

சித்தாந்தம் பல கூறிய சித்தர்களின் சிந்தையில் நின்றவள்...

மந்திரம் பற்பல ஓதிய முனிவர்களின் நாவில் நின்றவள்ஞ்

கவியரசு கண்ணதாசன் கூறிய ஒவ்வொரு கவியிலும் நின்றவள்...

இப்படி அனைவரிலும் அன்றும், இன்றும்,
என்றும் இருப்பாள். !
யாதுமாகியவளாய் !!
என் தமிழன்னை!!

**ஆ.பூபாரதி,**
இரண்டாம் ஆண்டு, இளங்கலை
துறை: கணினி அறிவியல்.
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

# நீ

நீ என்னோடு இருக்கிறாய் நீயாய்,
நான் உன்னோடு இருக்கிறேன் நானாய்.

என் சுவாசத்தில் காற்றாய்,
என் உடலினில் வெப்பமாய்.

என்னை குளிர்விக்கும் நீராய்,
என்னை தாங்கும் நிலமாய்.

என்றும் என்னை பார்க்கும் ஆகாயமாய்,
எங்கும் இருக்கிறாய், எதிலும் இருக்கிறாய்.

நீ என் வாழ்வின் ஆதாரமாய்.

நீயே அனைத்துக்கும் ஆதாரம்,
நீயே அனைவருக்கும் ஆதாரம்.

நீயே இயற்கைக்கும் ஆதாரம்,
நீயே செயற்கைக்கும் ஆதாரம்.

உன்னோடே என் அனைத்து நாட்களும் கலிந்தது,
எனவே - நீயின்றி நானில்லை என்றால் அது மிகையாகாது.

என் ஒவ்வொரு செயலிலும் நீயுள்ளாய்,
வாழும்போது எனக்குள்ளே வருவாய் நீ !
இறந்தாலும் உனக்குள்ளே வருவேன் நான்!!
நீ வேறுயாரும் இல்லை ஐயமின்றி சொல்வேன்
ஐம்பூதங்களே நீ என்று.

**ஆ.பூபாரதி,**
இரண்டாம் ஆண்டு, இளங்கலை
துறை: கணினி அறிவியல்.
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

## அழகென்பது எது

அழகென்பது எது அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியது அது
அழிவில்லாதது அது ஆழமானது அது

பார்க்கும் அனைத்து பொருட்களிலும் ரசிப்பது அது
பார்ப்பவர்கள் கண்ணோட்டத்தில் கற்பனை அழகு

காலை விடியலும் கண்ணெதிர் தோன்றிடும்
கண் கொள்ளா காட்சியை ரசிப்பது ஓரழகு

ஒளிக்கதிர்கள் பரவுதே தோகை விரித்து ஆடுதே
உலகெங்கும் வெளிச்சத்தை தந்திடும் ஓரழகு

பறவைகள் பறந்திடும் பரவசமாய் கத்திடும்
பூஞ்சோலை தேடியே கூட்டமாய் சென்றிடும்.

இளந்தென்றல் வீசுதே இளங்காலை பொழுதிலே
இனம்புரியா மனதிலே அமைதியான ஓரழகு
இளந்துளிர்கள் வேரூன்றி தலை தூக்கி பார்த்திடும்

இன்னிசை ஒலித்திடும் அன்னை குரலில் சுப்ரபாதம்
தன்னையே ஒளி விளக்காய் உருவெடுக்கும் ஓரழகு

காலை முதல் இரவு வரை ஆற்றும் பணி பேரழகு
பிதாவுக்கு நிகருண்டோ வழிகாட்டுவதிலே

பிள்ளைகள் தடம் மாறாமல் நல்வழி காட்டுவது ஓரழகு

தலைவன் கைகோர்த்து கரம்பிடித்த மணக்கோலம் தலைகுனிந்து
வெட்கத்தோடு நடப்பதோ பேரழகு

முகத்தில் மஞ்சள் நெற்றியில் குங்குமம் அடைந்திருக்கும் புது கோலம்
முதல் முறையாய் குடும்பபொறுப்பில் நுழைவது ஓரழகு!!

பத்துதிங்கள் போனதுமே மடியில் கொஞ்சம்
பேரழகு சொத்து சுகம் தேவையில்லை
உன் அழகு ஈடினிலே !!

குழந்தை சிரிப்பில் மயங்கி போனேன்
மழலை கொஞ்சிக் குரலில் மயங்காத வரும் உண்டோ !!

தத்தி தத்தி நடந்து நடைப்பழகும் ஓரழகு
தங்க நிறத்தில் ஜொலிக்கும் மேனி பேரழகு!!

பெற்ற பிள்ளைகள் பேரும் புகழும் அடைந்திடவே
உற்ற நண்பனாய் தோளுயரம் உயர்ந்து நிற்கும் ஓரழகு!!

நரைமுடியாய் வெள்ளி இழைகள் தலையினிலே
பேரன் பிள்ளைகளும் முற்றத்திலே ஆடிவரும் பேரழகு!!

தள்ளாடி தடுமாறி தடிக்கொண்டு நடைபழக
தன்னிறைவு மன மகிழ்வு
பெற்றுவிட்டேன் வாழ்க்கை என்னும் பேரழகு !!

நன்றி பொழிலே

**கஸ்தூரி பரசுராமன்**
புதுச்சேரி.

## மலர்

மலர் மலர்கிறது மகரந்த சேர்க்கையிலே
மல்லிகை மனம் வீசுகிறது பூஞ்சோலையிலே
மங்கைமனம் மயங்குகிறது நறுமணத்திலே
மங்கலங்கள் வீட்டில் பெருகுகிறது பூந்தோரணத்திலே

பூக்கள் பூக்கிறது புது வசந்தம் வருகையிலே
பூமிதனும் குளிர்கிறது புத்துணர்ச்சி மழையினிலே
பூத்துக் குலுங்கும் சிரிப்போடு பிள்ளைகளும் முற்றத்திலே
பூ கரகம் வருகையிலே சுற்றங்களும் முக்தியிலே

பூவுக்கு தனி சிறப்பு ஆலயத்தில் விழாவினிலே
புது வாழ்க்கை தொடங்கிடவே இல்லற திருமணங்களிலே
புதுவசந்தம் பூத்திடவே பூரிக்கும் மனங்களிலே
புன்னகையும் மலர்ந்திடுமே பூக்கள் மலர்வதிலே

கண்களும் மலர்கிறது பூக்கும் அழகினிலே
மனமும் மலர்கிறது கொஞ்சி பேசும் தலைவனாலே
இதழ்களும் மலர்கிறது மாசில்லா மனதினிலே
வாழ்க்கையும் மலர்கிறது உண்மையான உறவினிலே

மலர் மட்டும் மலர்வதில்லை நல்லுள்ளம்
பலராலே மன மகிழ்ந்து இல்லறமும் மலர்கிறது!!

நன்றி பொழிலே

**கஸ்தூரி பரசுராமன்**
புதுச்சேரி.

## என் தலைக் கடனே

"மறக்குடியில் பிறந்த தாயின் கடமையென
அவரது மனநிலையை சித்தரித்த கூற்று இதோ"

மறக்குடியில் ஓர் வரவு
மகப்பேறு எனும் நிகழ்வு!!

கற்பனைக்கும் எட்டாத மகத்தான
தாய்மையின் உயர் பெண்டீரே!!
உதிரத்தை உரமாக்கி
உடல் வலியை தன தாக்கி
உன்னத உயிர் கொடுக்கும் பிரம்மனவள்!!
பெற்ற பிள்ளையை பேணிக்காத்து
உற்ற நேரத்தில் நல் உணவு அளித்து!!
உயிர் கொடுத்து உன்னை காக்கும்
உடன் வாழும் உயர் தெய்வமவள் !!
உறவை ஊட்டி இவ்வுலகை காட்டி
களிமண்ணில் நல் சிற்பம் செய்த உயர் சிற்ப்பியவள்!!

பொறுப்பை தனதாக்கி போர்க்கள யுத்தி போல
வடித்திடுவார் பெற்ற மாந்தர்களை!!
வனப்பான நல்ல சூழலிலே அறிவை விரிவு செய்து!!
ஆளுமையை நிலை பெறச் செய்து
கனிவுடன் நல் கல்வியினை!!
கசடறவே கற்பிப்பார்
வனப்பான காளையை உருவாக்கிடுவார்
நல் வீரன் என்னும் பாங்கினிலே!!

கொல்லனின் கடமையோ கொஞ்சமும் சளைத்ததல்ல!!
போரை கையால அப்போரில் தன் தடம் பதிக்க!!
நல்வீரனுக்கு சிறந்தது
நல்ல கூர்மையான வேலே!!

அறத்தை கையாண்டு
அதன் வழி தன் மக்களை செலுத்துதலும்!!
சிறந்த போர்க்கலையை நல் மாண்புடன் பயிற்றுவிப்பதும்!!
நாட்டிற்கும் அம் மன்னனுக்கும் சிறந்ததன்றோ!!

தலைசிறந்த ஆண் மகனின்
தலையாயக் கடமையென!!
உள வலிமையோடு போரிட்டு
போர்க்களத்தில் எதிரிகளின் களிறை அழித்து!!
வெற்றி வாகை சூடி வர
சிறிதும் தன்னலமில்லாது!!
நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும்
அர்ப்பணிக்கும் கடமை நல்வீரனுக்குரியது!!
ஒரு மாவீரனின் வெற்றிப் பாதையில்
இத்தனை சக்தி என
பொன்முடியார் போல் நல் பொறுப்பான மாதர்களால்!!
பொத்தி வைத்த நல் பொற்காசாய்
இறைத்திட்டனர் இப்பூவுலகில்
சரித்திர சான்றோர்களின் வடிவத்தில்
மறக்குடியின் பெருமை
மலை உச்சி அடைகிறது!!!

**அங்கயற்கண்ணி சீனிவாசன்**
புதுச்சேரி.

# விருந்தோம்பல்

அதிகாலை சூரியன் அழகுடன் வளர
இதமாய் இருள் களைந்து இன்பத்திரை விலக

முற்றத்துக் காக்கை முன் எச்சரிக்கை விடுக்க
விருந்தினர் வரவுதனை விடியலிலே உரைக்க

தொலைநோக்கி என்னும் விழியால் வாசலை நோக்கிடவே
வந்திடும் உறவுகளை அகமகிழ வரவேற்க

புன்னகை ததும்பிய இன்முகத்தோடு -
சொந்த பந்தங்கள் வரவினை பாசத்தோடு அரவணைக்க

விரிப்புகள் விரித்திட்டு உறவுகளை அமர்வித்து
குளிர் பானையின் புதுநீர் குவளையில் கரம் ஏந்தி நிற்க

மனங்கோனா நல் வார்த்தையினால்
மயிலிறகால் வருடி நிற்க

சொந்த பந்தங்கள் சேர்க்கையினால்
புன்னகை பூக்கள் உதிரப் பெற

வீடெங்கும் வசந்த காற்று விடியலிலே வீசி நிற்க

விண்ணப்ப விளிம்பினிலே - உறவினர் சிற்றுண்டியை
அகமகிழ அருந்தினரே

விரைந்து வயல் சென்று
விளைபொருட்கள் கொணர்ந்து வர

வீதியோர கடை தெருவில் -
விருந்திற்கு வேண்டியது வாங்கி வர
கைக்குத்தல் அரிசி கொண்டு கண்ணிய அமுது செய்து
காய் கனிகளை தேர்ந்தெடுத்து கச்சித கறி சமைத்து
இனிப்புடன் நல்விருந்தை உளமாற சமைக்க பெற
குவளையில் நீர் ஏந்தி அமுதுன்ன அழைக்கப்பெற
திசையினை முன் வைத்தே விரிப்புகள் விரிக்க பெற
தலை வாழை இலை விரித்து - அதில்
இனிப்புடன் நல் ஊறுகாயையும்
இடுவதன் வாயிலாக உமிழ்நீர்
சுரப்பிக்கு ஊக்குவிக்கும் உணவாகிடுமே
நல் உணவுடன் கூட்டு பொரியலுமே
பசு நெய்யின் வாசத்தோடு
உண்டவர் மகிழ்ந்திடுவர் உவகையால் குளிர்ந்திடுவர்
வறுமையின் வாட்டலிலும் வசதியில்லா தேக்கமும்
குடும்பத்தில் இருந்திடனும்
விருந்தினரை உபசரிக்கும் விருந்தோம்பல் பண்புகளும்
கலாச்சார வாழ்க்கையிலே இரு கண்களாக போற்றும் மக்கள்
கிராமத்து மக்கள் என்று கிளர்ச்சியுடன் திகழ்கின்றனர்
காடு மேடு கழனியிலும் கால் கடந்து வேலை செய்திடினும்
விருந்தினரை உபசரிக்க ஒரு போதும் மறந்திலரே
தமிழர்களின் பாரம்பரியம் தலை நிமிர்ந்து நிற்குமிடம்
கிராமத்து மக்கள் என்று உவகை உரை சாற்றப்பெற
வந்தோரை வரவேற்று வாய் நிறைய இனிய மொழியாற்றி
வயலிலே விளைந்த பொருள் பல வடிவ முடிச்சுகளாய்
பதப்படுத்தி பையிலே பக்குவமாய் இட்டு விட
வனப்பான உணவிட்டு வாசல் வந்து வழி அனுப்பி
விருந்தோம்பலை சிறப்பிக்கும் தமிழர் குடி சொந்தங்களே!!!

**அங்கயற்கண்ணி ஸ்ரீனிவாசன்**
புதுச்சேரி.

# முழங்கு திரை

பாற்கடல் முகந்து
வண்ணனின் வண்ணமேற்று
முகட்டில் தங்கும் சூல்
மத்தள ஓசையில் களித்து
நாட்டிய மங்கையின் அகவல் மோகனம் ஆலிக்க
புள்ளினங்கள் படபடக்க
திவலைகள் தூறல் பனிகளாய்ச் சிந்தும்
திரைக்கரங்கள் உருண்டு முத்துக்களைக் கோர்க்கிறது
களிப்பின் உச்சியில் கழங்காடல் மேவி
வட்டுகளை அள்ளித் தெளிக்கிறது.
அம்மானை முற்ற திருமுழுக்காட்ட எத்தனிக்கிறது.
பச்சைக்கு உயிரூட்டி உரம் சேர்க்கிறது.
மதலைக்கு விளையாட்டு அயர்வித்துப் பொங்கும்
களிப்பில் திக்குமுக்காட
காமரச்சோலையில் அரும்புகளைச் சீதனமாகப் பெற்றுப்
புனலாடிக் களிக்கும் சோடிகளுக்கு வாரி வழங்கி ஏர்க்கலப்பைக்கு
ஆணை பிறப்பித்துத் தம் செலவினை மேற்கொள்ளும்.
குளம் குட்டைகளில் தேங்கி வாய்க்காலில்
பவனி வந்து ஏரிக்குள் அடங்குகிறது.
இன்னியம் பல காட்டிக் கொட்டி ஆர்பரித்துச் சமத்துவம் முழங்கும்.
பொங்கும் இச்சையடக்கி மௌனம் காத்து
முகத்துவாரம் பயணிக்கும்
முழங்கும் திரை.

**முனைவர் ஜா.கிரிஜா**
உதவிப் பேராசிரியர்
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

## அஞ்சிறைதும்பி

ஆதவன் ஒளிக்கற்றைப் பரவ கண்ட
நந்தவனம் செவிகளைக் கூர்மையாக்கிக் காத்திருக்கிறது.
அறுகால் நடனம் பயின்று சிறகுகளை அசைத்து
ஆடி வரும் அஞ்சிறையே!
மலர்களின் மகரந்தங்களைச் சுவைத்து மதலைகளின் அழகில் மயங்கிப் பிஞ்சு விரல்களில் சிறைபுகுந்த தும்பியே! தட்டான் தட்டான் கல்லெடு என்னும் கிள்ளைமொழியில் வேடிக்கை காட்டும் இளம்சிட்டுகளுக்கு விளையாட்டு பொருளாய் இன்பம் ஊட்டும் தும்பியே
சங்கத் தமிழன் ஏட்டில் அஞ்சிறைத்தும்பி என்று
கவின்மிகு நாமம் ஏற்றவனே!
நுண்வாசனை புலப்படுத்தும் திறன் கொண்டவனே!
உன் திறனில் மயங்கிய கவிகள் பாடுபொருளாகக் கவி இயற்றினர்.
நுண்ணறிவினால் தேர்ந்துணரும் ஆய்வாளனே!
மங்கை கூந்தலின் சுவையறிந்து உரைக்கும் விளம்பியே!
பூச்சிகளின் தேவதையே
நன்னீர் வாழ் சுகந்தமே
தரணியின் விளக்கமே
கார்மேக வருகையை முன்னறிப்பானே
நினைக்க நினைக்க இன்பம் தரும் தும்பியே
என் இன்பவாழ்வின் எல்லையை உணர்த்த தூது செல்லாயோ!

**முனைவர் ஜா. கிரிஜா**
உதவிப் பேராசிரியர்
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சென்னை.

# கலங்கரை விளக்கு

அலைகள் ஓய்ந்த ஆழியில்,
ஓய்ந்த வேளையில்
நெடுந்தூரம் நெடுவாலம் சென்ற பட்டினத்தார்கள்.
பாசியும், முத்தும் பவளமும்;மாணிக்கமும்
மினுமினுக்குது அங்கே!
விட்டுச் சென்ற உறவுகளும் வீட்டு வாசலில் எட்டிப் பார்க்கக்
கட்டுமரத்திலே கண்ணீர் கரைகிறது !
அப்ப...ப்பா...!
வெண்மேகம் சூழ்ந்து இருளான நேரத்தில்
நாமும்,!
கண்ணீரில் கரைந்து துயரில் துடித்தெழுந்து அன்பில் மூழ்கி,
கற்ற கல்வியும் காகிதமும் மாளாது!
கடல் அலையாக
நாமும் கல்விக் கடலில் மூழ்க!
கலங்கரை விளக்கு அதற்கு மேலும் ஒளிபரப்பலாம்!
பகல் வானில் பரிதியும்
இருள் வானில் சந்திரனும் கலங்கரை விளக்கு!
கல்வியில் எனக்குப் பொழிலே கலங்கரை விளக்கு!
கவலை நீக்கு!
விடியும் உனக்கு!
நாளை
நம் கிழக்கு நன்றாக இருக்கு!

**கவிஞர் சு. ஆத்மநாதன்**
(இளங்கலைத் தமிழ்)
நல்கிராமம்

## நளி சினை வேங்கை

மரமா வேங்கை
புலியா வேங்கை
நின்ற இடத்தில் காட்சி தந்தால் மரம்
உலா வந்தால் புலி
இரண்டுமே விருந்தளிக்கும் கண்களுக்கு.
கம்பீரமளிக்கும் உள்ளங்களுக்கு
பூத்திருந்தால் கண்களுக்கும் வீழ்ந்திருந்தால் காட்சிக்கும் கவினுறும்
விருட்சமாக தலவிருட்சமாக இருப்பதும் வேங்கை
இறைவன் வீற்றிருப்பதும் வேங்கை
சோழன் கொடியிலும் வேங்கை
வனத்திலும் வேங்கை
கண்ணிற்கு குளிர்ச்சி தருவதும் வேங்கை
மண்ணிற்கு குளிர்ச்சி தருவதும் வேங்கை
வேங்கை யாக்கைக்கு மருந்து கண்களுக்கு விருந்து
செறிந்த கிளைகளையுடையது வேங்கை செறிந்த
மரங்களுக்கிடையில் வாழ்வதும் வேங்கை
வெட்டுவதும் வேட்டையாடுவதும் மனிதனே
மனிதா எங்களை வாழவிடு
விழித்தெழுந்து எங்களை வளர்த்திடு

**கவிஞர் சு. ஆத்மநாதன்**
(இளங்கலைத் தமிழ்)
நல்கிராமம்

## பயணம்

பிறப்பு முதல் இன்று வரை....
தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.....
ஆனால் ....எத்தனை சுவாரஸ்யம்
ஒவ்வொரு பயணமும்
புதிதாக ஏதோ ஒன்றை கற்பிக்கிறது ...
உலகின் தேடலில்
ஓடுவதும் பயணமே....
அன்றாட வாழ்க்கை
அதுவும் ஓர் பயணமே....
பிரிவின் போது
தொலைதூரப் பயணம் .....
சேர்வின் போது
நடைபோடும் பயணம்.....
ஒரு நாள் பயணம் நின்றால்
உலகம் சற்று நிற்கும் ...
தன்னை மறக்கும் ...
கடைசிவரை தொடர்வது
பயணம் ஒன்றே....
எனக்கு பிடித்த பயணம்
என் தோழனுடன்
தொலைதூர நடைபயணம் .....
என் தோழமைகளே என்னுடன் பயணிப்பீர்களா ....?
நன்றி பொழிலே....!

**க. பாரத்**
இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு
நெட்டியேந்தல்

## வடவரை

தடதட என வீழ் அருவியில்
களிறுகள் பிடியோடு பிளிறியே உறவாட

கடகட வென வுருள் திரள் கனி
உடைபட கடிகமழ் நறவது சுனை பாய

மடவையுங் குரவையு மாந்தியே
துள்ளிட மயிலினம் பயந்து வெருண்டோட

வட வரைக் குன்றினில் சிதறிய வேங்கை
மணமது பரப்பிடும் புலியாக

நெடுவரைக் கிழவரை நடம்புரி அழகரை
திட மொடு சிந்தையில் பதிவோமே

நடைபயில் முருகரைக் குடமுனி பொதிகையில்
நற்றமிழ் பாடிட வமிழ்தாமே

மொழி தரு மியலிசை சுவைமிகு கரும்பென
புலவர்கள் பாடிய கவி தானே

கிழங்கோடு தினைய கிற் சந்தனங் கமுகென
விளைகிற குறிஞ்சி மலை தானே

இனமுகில் தவழ் மதில் எழிற்பொழில்
பெருந்துறை எமக்கருள் ஆவுடைப் பெருமானே

**முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன்**
திருப்பெருந்துறை

## மா

மாமறையோதிய மாதனு பங்கியின் தாமரைச் சேவடி நிழலே
மா மனை ஏறிய மாபதி யாவரும் தூயனை ஏத்துவர் துதியே
மான் மதந் தூவிய மானிதராணியர் தேன்மொழி செப்புவர் தமிழே
மாருதம் வீசிடும் வேளையிற் சோலையில் மாளவ கவுளையிற் குயிலே
மாரியி லோடைக ளே ரிக னீர்நிலை மாமனி மாசூற் றளியே
மார்பினிற் சாந்தம் பூசிய புலவர்கள் மாத்திரை யளப்பர் கவியே
மாதவி கலந்து மாவினைப் பிசைந்து மதலைக் கூட்டுவர் களியே
மாதுளர் வந்து மாப் பணந் தந்து மாமணி பூட்டுவர் நெளியே
மாயுறு காலமா தாகிய போதினில் வேகமா தாய் வருங் கூற்றே
தோயுறுவன்புட னேயறஞ் செய்துநற் றூய்மைதாய்ப் பழிமாற்றே.

**முனைவர் சேந்தன் பனைய வயல் சிவகவி காளிதாசன்**
திருப்பெருந்துறை

## அஞ்சிறைத்தும்பி

சின்னவனாய் இருக்கையிலே
என்விழிகள் வியப்படையும்
கண்ணெதிரே பறந்துசென்று
இறகுகளை மூடித்திறந்து
வண்ணவண்ண நிறங்களாலே
கிரங்கவைக்கும் உன்னழகு
பின்னலிடை சடைபோலே
வால்முழுதும் மின்னிடுமே.!!!

மண்டியிட்டு உனைப்பிடிக்க
கொஞ்சநேரம் முயற்சிப்பேன்
கண்டுவிடா நீயிருக்க
கடும்அமைதி உண்டாக்கி
தொண்டனாக அமர்ந்திருந்து
உன்வாலைத் தொடுமுன்னே
முண்டியெடுத்து நீ பறந்து
முள்வேலியில் அமர்ந்திடுவாய்...!

அயல்மகரந்தச் சேர்க்கையாம்
அரியதொரு செயலினையே
வயல்வெளியில் நீ நடத்தி
உழவனுக்கோ உதவிட்டாய்
துயில்கொள்ளும் பூமடியில்
உன்வாழ்க்கை துவங்குவதால்
கயல்விழியின் மாமன்னன்
கனவுகளில் குறுந்தொகைநீ...!

சிறகுகளின் வரிகளெல்லாம்
சிந்தனைக்கே எட்டாத
சிறப்புமிக்க வடிவமைப்பை
பறக்குமெந்தன் ஆடையிலே
இறக்குமதி செய்திருந்தும்
நிறக்கலப்பில் உன்னழகை
பிறக்கவைத்து பேரழகாய்
ரசிக்கமனம் ஏங்குதென்பேன்....!

**கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி**
சிங்கப்பூர்

## நளி சினை வேங்கை

மஞ்சளுங் கருப்புங் கலந்த
மண்ணினப் புலியின் தேகமே
அஞ்சுமே கரியுங் கண்டிதைத்
துஞ்சமாய் வதைக்கத் துணியுமே
கொஞ்சுமே உந்தன் மலரின்
மணத்தை வண்டுகள் கண்டே
விஞ்ஞிடுந் தேனை வியந்து
உறிஞ்சிட நடனமும் ஆடுமே

தஞ்சமும் வேண்டியே தழைகளை
திண்றிடும் தற்பெரு  மானினம்
பஞ்சுமேல் மெத்தயாய் பசுங்குளிர்
நிழலிலே படுத்திடும சதியாய்
அஞ்சுகம் அழைக்குமே அதன்தன்
கூட்டத்தை அடைக்கலங் கூறியே
வஞ்சமே யறியா வாழ்ந்திடும்
விலங்கினம் வந்திடுந் நாளுமே.

பொன்னிற மேனியாய்ப்  பூக்களை
உதித்திடும் மண்ணிலத் தேவனே
உன்னையே நம்பியே உயிரினம்
அனைத்துமே உறைவிடந் தேடுமே
விண்ணவர் நோக்கியும் வேட்டுவர்
தூக்கிடும் உன்நிலை கொற்றமே
கண்ணிமை  உறங்கவே கற்பக
விருட்சமாய் காத்திடும் வேங்கையே.

பெண்ணினம் போலவே பேரிடர்
நீக்கிடும் பெருமையாய் நீயுமே
உண்ணுயிர்த் தேகமே உயர்நிலை
மருந்தாய் உலகமேப் போற்றுமே
எண்ணிலாப் பயனாய் என்வீட்டில்
தூணுமாய் துயிலுறுங் கட்டிலே
உன்னினம் உயர்ந்ததே உயர்வகைத்
தேக்குபோல் உலகெலாம் ஆனதே.

வேங்கையும் ஏறுமே வீற்றிடக்
கிளைகளில் பாங்கினைத் தேடியே
மாங்குயில் கண்டதும் மறைவிடந்
தேடுமே மறைக்கவே முட்டையை
தாங்குமே வேங்கையே வெய்யிலின்
வேட்கையும் விரயமாய் ஆகுமே
நீங்கிடுந் துயரெலாம் நினைவுமே
மறந்திட நீண்டிடுமுன் நிழலே!!!

*பொருள்:*
*கரி =யானை*
*அஞ்சுகம்=கிளி*
*வேட்கை= தாகம்*
*பாங்கி= தோழன்/தோழி*
*துயில்= தூக்கம்*
*பேரிடர்= பெருந்துன்பம்*

**கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி**
சிங்கப்பூர்

## ஊர்க் குருவி

ஏ மனிதா...
அந்த பிரபஞ்சத்தை ஒப்பிட்டால்
நீயொரு மணற் பொடி
அந்த இயற்கையோடு ஒப்பிட்டால்
நீயொரு அற்ப பதர்.
ஆனால் உன் எண்ணமோ
முத்தேவர்களுக்கு நீ அதிபதி என்று.
மற்றவரெல்லாம் உன் அடிமையென்று.
ஒன்றுமே இல்லாமல்
அதிகாரம் படைத்தவனென்று
ஓர் மமதை.

நிரந்தரமற்ற வாழ்வு
நிரந்தரமென ஓர் போதை.
மாபெரும் சக்திக்கு முன்
நீ ஒரு அற்ப புழு.
இருந்தும் நீ ஆடுகிறாய்....
ஆணவப்படுகிறாய்.....
ஆர்பரிக்கிறாய்..

நீயும் ஒரு ஊர் குருவிதானே..!
எத்தனை உயரம் பறந்தாலும்
நீ பருந்தாகிட முடியாது.
எத்தனை உயரம் நீ பறந்தாலும்
நிலவை நீ தொட்டுவிட முடியாது.
உண்மை நிலை புரிந்து - உன்
தன்மை நிலை அறிந்து
அடங்கி நீயும் வாழ்ந்து விட்டால்
அடக்கி நீயும் நடந்து கொண்டால்
அந்த அடக்கம் அமரருள் வைத்து
உன்னை உயர்த்தி விடுமல்லவா ...!

**கவிஞர் மருத்துவர் மகேந்திரன்**
புதுச்சேரி

## மாலை

சுட்டெரித்த சூரியனவன் தன்
வெப்பம் தனிய அலை கடலில்
மூழ்கும் அந்தி சாயும் நேரம்
வெப்பக் காற்றும் சற்றே குளிர்ந்து
உடல் தழுவி செல்லும் மெல்ல
குளிரும் அந்த மாலை நேரம்
மனமதின் அழுத்தம் குறைந்தே
அங்கு இளைப்பாற ஓர் ஏகாந்த
இன்பம் தோன்றிடுமே

அந்த மாலை ...
அந்தி மாலை
நாளும் முடிந்து...இரவு தொடங்கும்...
ஒளியும் அல்லாது...இருட்டும் அல்லாது
புகை படர்ந்த அந்த மாலை
இரை தேடிய பறவை கூட்டம்
கூடுதிரும்பி குஞ்சுகளோடு
கொஞ்சும் அந்த இரைச்சல் சத்தம்....
ஓடிப்பிடித்து கண்ணாம்மூச்சு
விளையாடும் சிறார்களின்
சிரிப்பதனின் கோஷ சத்தம்...

ஏர் உழுது வீடு திரும்பும்
உழவர்களின் எருதுகளோடு
நடைபோடும் மணியின் சத்தம்...
உரலில் இட்ட நெல்லை

**கவிஞர் மருத்துவர் மகேந்திரன்**
புதுச்சேரி

## நட்பின் நாடி

முகத்தின் பொலிவில் பூப்பதா நட்பு?
அகத்தின் ஒளியில் அமர்வதே நட்பு!
நகமும் சதையும் இணைவது போலே
இகத்தின் பயனில் இணைவதே நட்பு!
சிற்றில் கட்டி சிதைத்திட்ட போதும்
புற்றின் பாம்பாய் சீரி எழாது
பற்றும் கையில் பாசப் பிணைப்பு
சுற்றும் விழியில் கருணை கலப்பு
நற்றாய் போல நற்சொல் கூறி
கற்றளி போலே சிற்றிலும் எழும்பும்!
ஒன்றாய் கூடித் திரிந்து அமர்ந்து
நன்றாய் கல்வி படித்து முடித்து
சென்றாய் பணிக்கோ பிறிதொரு திசைக்கு
என்றாழ் போலே நின்முகம் காண
கொன்றை மலராய் விழிகளும் மாறும்
கண்ணன் குசேலன் நட்பை போன்றே
எண்ணம் கொள்ளும் நண்பர் பலரும்
திண்ணம் ஈருடல் ஒருயிர் ஆவதே !
பருகி குடிக்கும் நட்பின் உணர்வை
குருதி யோட்டம் நன்கு அறியும்!
உருகி பிணைக்கும் நட்பின் நாடி
உயிரே என்று உணர்ந்து போற்று !

**கா.பூங்குழலி,**
புவனகிரி,

## தமிழாழி

தொன்மை தாயே தமிழே வாழி!
முன்மை பெற்று விளங்க வாழி!
நுண்மை நிறைந்த மொழியே வாழி!
திண்மை நிரம்ப பெற்றாய் வாழி!
எண்மை ஏற்று திகழ்வாய் வாழி!
ஒண்மை புதையல் கொண்டாய் வாழி!
இனிமை பொழியும் அமுதே வாழி!
தனிமை தழுவும் உயிரே வாழி!

இளமை பொருந்தும் பெண்ணே வாழி!
வளமை கொண்ட வனப்பே வாழி!
தாய்மை குணத்தை ஏற்றாய் வாழி!
தூய்மை நினக்கு நீயே வாழி!
மும்மை பிறவி உணர்ந்தாய் வாழி!
செம்மை பயின்ற முதலே வாழி!
இயன்மை ஏற்று மகிழ்ந்தாய் வாழி!
வியன்மை உலகில் உயர்ந்தாய் வாழி!

இறவா நூல்கள் பெற்றாய் வாழி!
மறவா சங்கம் அமைத்தாய் வாழி!
உறவா மொழியில் அமைந்தாய் வாழி!
புதுமை எதுவும் ஏற்பாய் வாழி!
பொதுமை பண்பில் சிறந்தாய் வாழி!
பொதுவாய் மொழிக்குத் தமிழே ஆழி!

**கா.பூங்குழலி,**
புவனகிரி,

# அன்னைத்தமிழ்

முக்கடலும் முழங்கும் குமரியில் தோன்றும் பேறு தந்தவளே!
தாலாட்டில் கண்ணுறக்கி அரிச்சுவட்டில் கைபிடித்து
நன் மாணவியாய் முத்திரை வழங்கி
உயர்கல்வியில் உயரவைத்து மேல்படிப்புக்குக் களம் அமைத்து
இளங்கலையில் காலூன்றி
முதுகலையில் எதிர்காலத்தை உணர்த்தி
ஆய்வாளனாய்த் தரணியில் களம்பதித்து
முனைவர் பட்டத்தில் மேடையேற்றி
வாழ்க்கைநிலைப்பாட்டை உணர்த்திய அன்னையே
நினைவு மகரந்தங்களைச் சுமக்கும் தேனியாய்க்
கருவறையில் தங்கி நாற்பாலும் புகட்டி
என் ஆவியில் இன்பம் ஊட்டி
வாழ்க்கைப்பயணத்தில் பாங்கியாய் வேடிக்கை கதைகள்
கதைத்து ஒளியூட்டினாய்
இழுக்கண் வேளையில் உடுக்கையாய் அணிதந்தாய்
எனக்கான பாதையை அடையாளப்படுத்தியவளும்
நீயே என் மனத்திரைக்குள் கரு தரித்துப்
புனைவுக்குள் முகம் புதைத்துத்
தடுக்கும்வேளை ஊன்றுகோலாய்த் தாங்கிக்
கல்லைச் செதுக்கும் உளியாய் மேன்மையளித்தாய்
கைம்மாறு வேண்டா மாரியாய்
என்னுள் கலந்து வளப்படுத்தி
அவியுணவினை ஊட்டிய அன்னையே
உன்தாள் மலர்ஆகின்றேன்
மனிதம் என்னும் இசையை என்னுள் ஊட்டி
இவ்வுலக தேரில் வலம்வர வைத்தாய்
மிதிப்பவரை மோதும் வலியூட்டினாய்
சீறும் செருநரின் செருக்கு அடக்கத் தூது செல்லாயோ
இகழ்வார் வாசலைத் எட்ட வைத்துப்

பளிங்கு மாளிகைக்குள் புக வைத்தாய்
கோடாங்கியாய் வாக்களித்தாய்
தன்னம்பிக்கை பால் ஊட்டி வீரநடை காட்டினாய்
காலத்தை விலைபேசும் காலத்தில்
காலத்தை வெல்லும் வீரம் நல்கியவளே!
கலைமகளாய்ப் பாலூட்டி அலைமகளாய்
உருதரித்தவளே உன்னைப் பெற என்ன தவம் செய்தேனோ!
அன்னையே! தமிழே!
என் இறுதி மூச்சும் உன்னையே தியானிக்கும் வரம் அருள்வாய்!

**முனைவர் ஜா. கிரிஜா**
கன்னியாகுமரி மாவட்டம்

## அரவுறுதுயரம்

ஊர் துஞ்சும் நள்ளென் யாமத்து விட்டில்
வெளிச்சத்தில் அயலார் கண்ணுற்றால்
பழி சேரும் காதலியை சிந்திக்கையில் நெஞ்சம் கலங்கும்
காதலன் வருகையில் தாமதம் நேர்கையில் முட்கள் துளைக்கும் நினைவுகளில் தவிக்கும் காதலி
மனமொத்த காதலன் கரம்கோர்க்க குறிக்கிடும் சீதனம்
கைபிடித்த காதலன் திசைமாறினால் சுமைதாங்கும் இதயம்
பொருள்வயின் பிரிவு
காதலனை இழக்கும் கிழப்பருவம்
எனத் தொடருகிறது நங்கையின் அரவுறுதுயரம்
மேகம் இசைக்கும் மத்தள ஓசையில்
கிடுகிடுவென்று கிடுகிடுப்பான் தனியறைவாசி
கொட்டும் பனித்துளியில் சில்லிடும் மேனியை
உறைய வைக்கும் தென்றலின் தீண்டல்
சுட்டெரிக்கும் கோடையில் கிறங்கவைக்கும் நண்பகல்
நள்ளிரவில் அரளவைக்கும் அசையும் கொடி
மேனியில் பொத்தென்று விழுந்த பல்லி கம்பலைப் பிறப்பிக்கும்
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போல நசுக்கும் சுயநலவாதிகள்
அகத்தில் வஞ்சனை ஒளிர புறத்தில் கனிவூட்டும் மாறுவேடக்காரர்கள்
ஒட்டி உறவாடிக் குழி தோண்டும் குள்ளநரிகள்
பதவி போர்வைக்குள் மிரளும் போர்வைவாதிகளென தொடருகிறது என் விழிப்பார்வையில் அரவுறு துயரம்

நன்றி
**முனைவர் ஜா. கிரிஜா**
குமரிமாவட்டம்

## மடமான்?பிணையோடு உகள

இராமர் இருக்கும் இடமே அயோத்தி என்று
வாழ்ந்தாள் சீதை காட்டிலே

இலக்குமனன் அனுபவிக்காத எதுவும் தனக்கு இல்லை
என்று தவமிருந்தாள் ஊர்மிளை நாட்டிலே

திருதராட்டினன் காணாத எதையும்
தான் காண மாட்டேன் என்றாள்
கண்களை கட்டிய காந்தாரி

நெய்தல் நிலத்து அன்றில் பறவையோ வாழாது துணையின்றி
கின்னர பறவையும் அவ்வாறே
கின்னர கீதப்பிரியாய என்ற இசை போல

களிறு தன் பிடிக்காக நீர்அருந்தாமல்
அருந்துவது போல நடிக்கும் பிளிறோதன் களிறுக்காக
அதுவும் நடித்து காட்டும் புறனானூற்றிலே

இவையெல்லாம் சங்க காலத்து மடமான் பிணையோடு
உகள என்பது போல

இக்கால பெண்கள் பணத்தையும்
பணியையும் இனக்கவர்ச்சி கொண்டு ஆட்கொண்டு பின் தான் தான்
என்று மமதை கொண்டு பிரிகின்றனர்

விட்டுக்கொடுப்பவர் கெட்டு போவதில்லை
கெட்டுப்போனவர் விட்டுக் கொடுப்பதுமில்லை
என்பதை காற்றிலே விட்டு விட்டு தனி மரமாய்
வலம் வருகின்றனர் இன்றைய மகளிர்

பூமி தன் அச்சிலிருந்து விலகினால்
உலகம் இல்லை சார்ந்து வாழ்தல் என்ற
இலக்கிலிருந்து விலகினால் குடும்பமில்லை
இதை உணர்ந்து விட்டுக் கொடுத்து வீடுபேற்றினை அடைவோம்

**ஆ.சிவசங்கரி மணிவாசகம்**
சிதம்பரம்

# தேம்புனலைச் செழுங்கடக் தருமோ?

கடற்கரையில் இருந்துகொண்டே
நீச்சல் கற்க முடியுமா?
நீரில் இறங்கினால்தானே முடியும்.
இறங்கிவிட்டேன்
தலைப்பினுள்.
என்
தேடலில் கிடைத்ததை
உங்களுக்கும் பகிர்கிறேன்
கேளுங்கள்.!
தேம்புனல் எனும்
தெவிட்டாத
தேன்சுவை நன்நீரை
செழுமைப் பொருந்திய
வளமிக்க
உப்புக்கடல் தருமோ?
வாழ்வின் அர்த்தம்
ஒளிந்திருக்கும் தேடலை....
தேடுவதற்கான இடத்தில்தானே
தேடல் தகும்!
இதனை இதனால்
இவன் கண்விடல் எனும்
வள்ளுவனைப்போல்
எதனை எதனால்
எங்கு தேடல் தகுமோ
அங்கு தேடினால்தானே
தேடலின் அர்த்தம் விளங்கும்
தேடியதும் கிடைக்கப்பெரும்.

✍ பதிப்பாசிரியர் பாவலர் **எல்ல.கிருஷ்ணமூர்த்தி**

உன்னிடம் ஒளிந்திருக்கும்
நிம்மதியை...
உனக்குள்ளே
பொதிந்திருக்கும்
திறமையை...
உனக்குள்ளே மறைந்திருக்கும்
இறைவனை....
உன்னால் உன்னைவிட்டு
எங்கு தேடினால் கிடைக்கும்?
தேடு உன்னிடமே.....
உன்னைவிட்டு
தொலைந்து போனதாய்
எண்ணி எண்ணி
வருந்தி கொண்டிராமல்
தேடு உன்னிடமே!
உன்னுடைய
நம்பிக்கையை
நிம்மதியை
அன்பை
காதலை
தேடு உன்னிடமே.
ஒரு நல்ல நூலை
நல்ல நூலை நாடு
தேடும் இடத்தில் தேடு
அது கிடைத்தால்
நம்பிக்கை எனும்
சுவர்க்கத்தை
உனக்கானதாக்கும்.
ஒரு நல்ல பணியை
மன அமைதிதரும்
நல்ல பணியை தேடு
அது கிடைத்தால்
நிம்மதி எனும் பூந்தோட்டமாய்

உன்னைச் சுற்றி
எப்பொழுதும் மணம்வீசும்.
ஒரு நல்ல உறவை
எதிர்பார்ப்பில்லா
உறவை நாடு
அது கிடைத்தால்
அன்பெனும் உடற்கவசமாய்
உனைவிட்டு
அகலாதிருக்கும்.
ஒரு நல்ல மனதை
எச்சூழலிலும் உனை
களங்கப்படுத்தாத
விட்டுத்தராத
மனதை நாடு அது
கிடைத்தால்
காதலெனும்
உயிர்த்துடிப்பாய்
உன்னுள்ளே
துடித்துக் கொண்டிருக்கும்.
தேடல் ஒன்று உள்ளவரை
வாழ்வில் துடிப்பிருக்கும்.
தேடுங்கள் தேடும் இடத்தில்
தேடுங்கள்!
நாடுங்கள் தேடலின் பொருள்
அறிந்து நாடுங்கள்

**முனைவர் கி. துர்காதேவி,**
வேல்ஸ் பல்கலைக் கழகம்,
சென்னை

## பகழி

களம் பல சென்று
உளம் மகிழ வென்று
வாகை சூடியவன்தான் நான்
தோகை உனைக் கண்டு
பதாகை முத்திரையில் விண்டு - உன்
விழி அம்பினால் - என்
வில் அம்பு வீழ்ந்ததடி! - சகியே
உன்
விழி அம்பினால் - என்
வில் அம்பு வீழ்ந்ததடி!

பண்பு பொருந்திய காகுத்தனின் பகழிக்கு
இராவனேச்வரனின் பாராட்டு! பாராட்-டு!
வீரம் பொருந்திய இந்நேசப்பித்தனின்
அன்பினை நிலைநாட்ட மனமில்லையா
மனம் இல்லையா!

அம்பு தைத்தால் வீழ்பவர்கள் உண்டு.
உன் பார்வை அம்பு தைத்தால்தானடி
நான் வாழ்வேன்
வாழும் வரம் கொண்டு.

நேர்கொண்டப் பார்வையளே
தேர் நிகர்த்தப் பெண்ணவளே
பார் புகழ வாழ்வேனடி - உன்
பார்வை அம்பு என்மீது விழுந்தால்...

சொல்லற்றுப் போகாத
கம்பனின் அம்பறாத்தூணி போன்று
வில்லற்றுப் போகாத இராமனின்
அம்பறாத்தூணி போன்று
அன்பற்றுப் போகாதடி - சகியே
அன்பற்றுப் போகாதடி என்
அன்பறாத்தூணியிலே!

**முனைவர் கி. துர்காதேவி,**
வேல்ஸ் பல்கலைக் கழகம்,
சென்னை

## நவரசம்

கைகூப்பி கண்மூடி வணங்கிடும் கூத்த பிரானே
கணநாதனாய் காட்சியளிக்கும் திரு நடனம் புரிபவனே
நாட்டியத்தில் முதற்கடவுளாக விளங்கும் நாயகனே
நவரசத்தையும் காட்டிடும் உணர்ச்சியின் பரதமே

இந்திய பாரம்பரிய நடனம் பரதநாட்டியம்
விந்திய மலையின் ஆணவத்தை அழித்தது நடராஜராம்
சாந்தம் வந்து குடிகொள்ளும் அமைதி பேருருவில்
சொந்தங்கள் கூடிடும் அன்பு நெஞ்சங்களில்

வஞ்சனைகள் இல்லாதது மழலை சிரிப்பு
கொஞ்சல்கள் வந்து வந்திடுமே சண்டையின் விளிம்பில்
மஞ்சள் பூசிடும் மங்கையின் வெட்கம்
தஞ்சம் அடைந்திடுவான் தலைவியின் மடியில்

அரவம் கண்டதுமே அச்சம் அடைந்திடுவோம்
வரங்கள் பெற்றதுமே இன்பங்கள் இனித்திடுமே
கரங்களை உயர்த்திடுவோம் வெற்றி பெருமிதத்திலே
விரயங்கள் வந்திடவே கலங்கும் அழுகையிலே
நரகங்கள் அடைவது அவலமான வாழ்க்கையிலே
நவரசத்தையும் கற்றிடுவோம் பரதத்தை போற்றிடுவோம்.

நன்றி பொழிலே

**கஸ்தூரி பரசுராமன்**
புதுச்சேரி

# விருந்தோம்பல்

இன்முகத்துடன் இன் சொல்பேசி வரவேற்று
இல்லத்தில் விருந்தளிப்பது தமிழர் பண்பாடே!!

கண் மலர்ந்து கைகூப்பி வரவேற்கும் செயலுடன்
பண்பட்டு பக்குவமாய் நடப்பது தமிழர் மாண்பே!!

வறுமையிலும்
வந்தோரின் பசிப்போக்கி
மறுமையிலும் சொர்க்கத்தை அடைவது உறுதியே!!

தமிழர்களின் தொன்மையான பழக்கவழக்கம்
அமிர்தம் கிடைத்தாலும் பகிர்ந்து உண்ணுதலே!!

இல்லறத்தின் தலையாய நெறி விருந்தோம்பல்
இயன்றவரை சிறப்பித்து விருந்தளிப்பது கடமையே!!

விருந்தோம்பலின் அருமை அறிந்து வள்ளுவர்
திருக்குறளில் ஓர் அதிகாரத்தில் விருந்து படைத்துள்ளார்

அதியமான் கொடுத்த நெல்லிக்கனி போன்று
பதிய வேண்டும் நம் மனதில் விருந்தோம்பலின் சிறப்பு!!

கம்பர் இளங்கோவடிகள் கூற்றை நினைவில் கொண்டு
கணவன் மனைவி இணைந்து உண்ண வேண்டும்

விருந்தோம்பலில் பெரும் பங்கு பெண்களுக்கே - என்ற
கருத்தை திரிகடுகம் பறைசாற்றுகிறது

முதல் நாள் போன்று வரவேற்று விருந்தளித்து - என்றும்
முகம் மலர்ச்சியுடன் சிறப்பிப்பது ஔவையார் கூற்று

விருந்தோம்பலை படைத்து வியத்தகு நின்று
பாருக்குள்ளே தமிழர் பண்பாட்டை நிலைநாட்டிடுவோம்.
நன்றி பொழிலே

**கஸ்தூரி பரசுராமன்**
புதுச்சேரி.

## தூது

மலையோ உயர்ந்து நின்றது
மேகமோ அதனைத் தழுவிச் சென்றது
மழையோ ஏங்கி நின்றது
தென்றலோ தெரிந்து வந்தது
மழைக்காகத் தூது சென்றது
மேகத்தை வருடிப் பார்த்தது
பின்.... மழை தூது சென்றது
எங்கு சென்றது ?
மண்ணுக்குச் சென்றது
ஏன் சென்றது.....?
மண்ணிலிருந்த சிறு விதைக்காகச் சென்றது.....!
விதையோ ஏற்றுக்கொண்டது ....
செடியோ முளைத்தது.....!
பருவம் வந்தது ....
சிறு மொட்டு தோன்றியது ....!
மொட்டு அரும்பாகி
அரும்பு போதாகி
போது அலாராகி
அலர் பூவாகி
பூ மலராகி
மலர் வீயானதே.....!!!
அதற்காகவோ......
மழை தூது சென்றது.....?
நன்றி பொழிலே.....!!!

**க. பாரத்**
இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு
நெட்டியேந்தல்.

## பட்டிக்காடு

கொதிப்போமா? பறப்போமா?
ஐயத்தில் கூவும் கோழியும்
கோலமோ? அலங்கோலமோ?
ரசித்துக் கிறுக்கும் குமரியும்
இருக்குமோ? போகுமோ?
ஏதொன்னும் தெரியாத கிழவியும்
அடி வாங்க போவது தெரியாமல்
அழகாய் உறங்கும் நாயும்
நாயைக் கண்டு பதுங்கிச் சென்று
கல்லால் அடிக்கும் சிறுவனும்
உயிர் தப்புமோ? தப்பாதோ?
என்று ஓட்டம் பிடிக்கும் நாயும்
நாயைக் கண்டு சிதறி ஓடும்
கோழிக் கூட்டமும்
வெறித்துப் பார்க்கும் வெள்ளாடும்
இன்னும் இரண்டு அடி போடுடா
என்று சொல்லும் கிழவனும்
இவற்றை பார்த்து நகைக்கும் சிறுமியும்
பட்டிக்காட்டில் தானே பார்க்க முடியும்!
நன்றி பொழிலே!!!

**கவிஞர் க. பாரத்**
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு
நெட்டியேந்தல்

## மனிதா, எத்தனையில் ஒரு பங்கு நீ?

(அறுசீர் விருத்தம்)

ஆண்டாய்க் கோடி சுற்றிவரும்
அகிலம் தோற்றம் யாரறிவர் !
மீண்டும் மீண்டும் ஓடிவர
மின்னும் ஆற்றல் அன்றாடம்
தோண்டத் தோண்ட ஊரும்நீர்
தோய்வைக் காணா நன்னிலத்தாய்
மாண்டக் கோடி மரவகையில்
மனிதா நீயோ எவ்வளவு !

ஆக்கும் ஆற்றல் உனக்கில்லை
அவணி காற்றில் துகள்கூட
போக்கும் உயிர்கள் பலவுண்டு
பொறிஞர் பூட்டும் உயிரல்ல
தாக்கும் போர்தான் மூள்வதனால்
தரிசாய்ப் போகும் மனிதகுலம்
காக்கும் அறிவை இழந்தாயே
கணித்துப் பார்ப்பாய் உன்பங்கை !

முத்தைக் கொண்ட கடல்நூறு
முடியும் வாழ்வில் உணராய்நீ
கத்தும் காற்றை அடைக்கத்தான்
கருவிச் செய்ய விழைவாயோ
சொத்துன் பெயரில் சிலகாலம்
சொடுக்கும் நேரம் தலைமுறையே
வித்தை யறிந்த மானிடனே
விண்ணைக் கூராய்ப் போடுவதேன் ?

கிட்டும் வாழ்வில் மகிழாமல்
கிளர்ச்சி செய்து பிழைக்கின்றாய்
சொட்டும் நீரை அருந்தாமல்
சுவைக்கும் வேதி குடிப்பவனே
எட்டும் திக்கை என்நாடாய்
ஏய்த்துப் பிழைக்க துணிந்தவனே
விட்டு வைத்த இயற்கைதனை
விரும்பி நீயும் சிதைக்கின்றாய் !

வேரை நீட்ட முடியாது
வேட்டை யாடி அழிக்கின்றாய்
பாறைத் துளியும் உருவாக்க
பண்புக் காணாப் பதர்தானே
பாரை யாளத் துடிக்கின்றாய்
பரந்த விண்ணில் எந்நிலைநீ
ஊரை ஏய்த்துப் பிழைப்பவனே
உன்னால் உலகில் பயனுண்டோ ! (5)

காட்டை யழிக்கும் மாமனிதா
காற்றின் கூற்றை உருவாக்கு
வீட்டைக் கட்டும் பெரும்பணிக்கு
வேட்டைக் கொண்டாய் மாமலையை
மேட்டை அள்ளி தூளாக்கி
பாட்டை யமைத்து பறக்கின்றாய்
சாட்டை யடிதான் வெகுவிரைவில்
சாலப் பொருந்த வாழ்வாயே !

மூட்டைக் கட்டும் பெரும்பணத்தை
முடிந்தால் கொடுத்துப் பழகிடுவாய்
பாட்டன் பூட்டன் அழித்திருந்தால்
பாசி வகையாய் நீயிருப்பாய்
வாட்டங் கொள்ளா மாமனிதா
வருந்தும் நாளைக் குறித்துக்கொள்
நாட்டம் கொண்டு நன்குணர்வாய்
நயந்து காப்பாய் இயற்கையைநீ !

வெப்பம் கக்கும் கதிரவன்பால்
வேண்டல் கொஞ்சம் தள்ளிநிற்க
கப்பல் காற்றில் மிதக்கிறதாம்
கனவோ அல்ல பால்வீதி
ஒப்பு நோக்க உன்னறிவில்
ஒற்றைப் படைப்பை அறிவாயோ
தொப்புள் கொடியாய் உறவென்றால்
தொடக்க மனிதன் யாராகும்?

மூலம் அறியா முன்பிருந்தோர்
மூட வழக்கம் கற்பித்து
ஞாலம் கருதி நல்லுலகை
நடத்தும் சத்தி எங்குளதோ
சாலச் சிறந்த விண்வெளியை
சழக்கை வெறுத்து நீஓதுக்க
காலம் தந்த ஞானியர்பால்
கணக்காய் உணர்வாய் உன்பங்கை !

பங்கில் வாழ்நாள் கணக்கிடத்தான்
　பகலும் இரவும் அங்கேது
எங்கும் நிறைந்த விண்வெளியை
　ஏனோ நம்மோர் அறிவதில்லை
பொங்கும் கோள்கள் பல்கோடி
　பொடியாய்த் தோன்றும் சுழற்பந்து
மங்கா ஒளியின் மறுவுலகில்
　மனிதா கூறு உன்பங்கை ! (10)

குறிப்பு:

இந்த மண்ணில், விண்ணில் நாம் ஒவ்வொருவரும் எத்தனையில் ஒருபங்கு; எத்தனை ஆண்டுகள் வாழ்வோம்; எவ்வளவு நீரை அருந்துவோம்; எவ்வளவு காற்றை உட்கொள்வோம்; எவ்வளவு உணவை உண்போம்; எவ்வளவு சொத்திற்கு எத்தனை காலம் உரிமையாள்வோம் என வினவினால் உண்மை விடையறிந்தால் வாழ்வு மகிழ்வாகும்.

பாழாய்ப் போகும் நுண்வாழ்வில் மகிழ்வாய் இருக்க அறிவோம். மிஞ்சி வாழ்வதல்ல வாழ்க்கை; அஞ்சி வாழ்ந்தால் அகிலம் வழிகாட்டும். எஞ்சியுள்ள வாழ்நாளில் இந்த பரந்த உலகில் நாம் எத்தனையில் ஒரு பங்கு என்றுணர்வோம் !

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
சிங்கப்பூர்

## படலைக் கண்ணி

பாதையெல்லாம் ஓடி
பாடுபட்டு தேடி
வீதி எல்லாம் கூடி
பரபரப்பாய் அலங்கரித்து
பக்குவமாய் எண்ணி
தயாரித்த படலைக் கண்ணி
அழைத்து நிற்கும் உறவினை ஒழித்து நிற்கும் வெறுமையை பழித்து நிற்கும் பகைமையை
அழித்து நிற்கும் கிருமியை செழித்து காட்டும் வளமையை.

பச்சை நிறத்தில் ஓர் பந்தம்
உச்சி பொழுதும் சொல்லும் சந்தம்
எச்சக்குறை தீர்க்கும் காந்தம்
சத்தியம் சொல்லும் மானுட ஆனந்தம்.

படர்ந்த மரத்தின் பாகங்களை அடர்ந்த மாலை ஏடுகளாக்கி
கூடுசேர மறுத்த பறவையின் தேடலைப் பரிணமித்து
பாடும் கூட்டத்திற்கும்
ஆடும் ஆட்டத்திற்கும்
தேடும் தெய்வ தரிசனத்திற்கும் வரமே வரவானது.

எட்டுத்திக்கு போனாலும்
இளவரசன் ஆனாலும்
மழையின்றி ஏது பாசம்
மணமின்றி ஏது வாசம்
மண்ணின்றி ஏது நேசம்
தலையின்றி ஏது தாசம்
இயற்கையின்றி ஏது வேசம்
இலையின்றி ஏது சுவாசம்
இயற்கையைக் காப்போம்
இடர்பாடுகளை தூர்ப்போம்.

**முனைவர் கு. நாகம்மாள்**
சென்னை



**முனைவர் சிவகவி காளிதாஸ்**
வாழ்வியல் இலக்கியப் பொழில்
வெளிநாடுவாழ் உறுப்பினர்
3. சிவசக்தி இல்லம், சாரதா தோட்டம்,
இராசகோபாலபுரம் அஞ்சல்,
புதுக்கோட்டை - 622003, தமிழ்நாடு - இந்தியா

## சிந்தையிலே இனிக்கின்ற தமிழச் சேவை

வாழ்க தமிழ்! வளர்க பொழில்!

அன்றொரு நாள் எங்கள் ஆவுடையார் கோயிலுக்கு சென்று வந்தேன். வந்தவுடன் எங்கள் வீட்டின் திண்ணையிலே அமர்ந்து நானும் செல் பேசியைத் திறந்து வைத்து, முகநூலில் முகம் பார்த்தேன்.

குப்பையெல்லாம் கொட்டியதென் கண்களுக்குள்! கூடாத செய்தியெல்லாம் தேள்க் கொடுக்காய்க் கொட்டியது, கிறுகிறுத்துப் போனேன் நான். எத்தனையோ சங்கங்கள்! மன்றங்கள்! என் தமிழை வாழ வைப்பதாகக் கூறி வெறும் கூச்சல் போடுகின்றார். தமிழை விட்டு வேற்று மொழி பேசுகின்றார், உளறுகின்றார்!.

சற்றும் நான் எதிர்பார்க்கவில்லை இதை. சட்டெனவே தொட்டுவிட்டேன் மறுநொடியில், (சிங்கப்பூர் வாழ்வியல் இலக்கியப் பொழில்) பொழில் பண்பலை வழி தழுவுகின்ற தமிழ்த் தென்றல் தான் வீச, வியர்த்து விட்டேன்! விருப்பமுடன் தான் ஏற்றுப் பிடித்துப் விட்டேன் கெட்டியாக! - அவ்விணைப்பை (www.zeno.fm/phozilfm) எல்ல.கிருஷ்ணமூர்த்திப் பாவலரின் வருணனையை! இருந்தபடி கேட்டு நான் மெய்சிலிர்த்தேன். வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பின் ஓர் அங்கமாக செயல்படுகிறதாம் பொழில் பண்பலை! வள்ளுவரின் குறள் ஆங்கே ஒலிக்கக் கேட்டு, மகிழ்ச்சியிலே "அட..டா! ஓ அடடா! என்றேன்! அருகிருந்த அப்பாவோ என்னடா? என்றார்.. தட்டிவிட்டேன் கைகளையே! ஆங்கிலத்தைத் தனிச்சிறப்பாய்ச் சொன்னவரை "Worthword" என்றே பெயரிட்டு அழைத்தேன். பாராட்டை எழுதி விட்டேன் பண்பலைக்கு. பழகிவிட்டேன் தமிழ் குடும்பம் தன்னில் என்னை.

அன்று முதல் இன்று வரை பொழிலில் சேர்ந்து அழகு தமிழ் கவிதைகளைப் பாடிவரும், செந்தமிழின் சிறிய பிள்ளை எனது பெயர்

சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன். பொழிலோடு பயணிக்கும் நாட்கள் எல்லாம் பொன்னான வரலாற்று நாட்களாகும் .

குயில்கள் பல பொழில்வந்து தமிழ் பாடக் கொஞ்சு தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள்; இசையோடு நாட்டியங்கள், மரபுப் பாடம் எல்லாமும் இங்குண்டு வாரீர்! வாரீர்! கவிநயம், கவியரும்பு , கவிப்பொழில் (முன்னர் பொழில் பாமாலை), கற்றறிந்த பெரியோர் தம் உரையின் வீச்சு, எல்லாம் எம் மாணவர்க்கு எடுத்துக் கூறி! இன்றும் இயற்றுகின்றார் பெருங்கவிதை பொழிலே வாழி! நற்றமிழ் சேர் குற்றாலக் குறவஞ்சி நல்லறங்கள் இயம்புகின்ற இலக்கியங்கள் பொழில் கவிஞர் பாடுகின்ற கவிதை யாவும் பொருள் மிகுந்து தமிழ் இனிக்கும் கற்கண்டாக! செவிமெடுத்துக் கேட்கின்றார் உலக நாட்டார்! சிந்தையிலே இனிக்கின்ற தமிழப் பணி செய்து வரும் சிங்கப்பூர் பொழிலே வாழி! செந்தமிழே என் தாயே! வாழ்த்துகின்றேன் !

வாழ்க தமிழ்! வளர்க பொழில்!

**முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன்**
திருப்பெருந்துறை.



**முனைவர் மு.ஜோதிலட்சுமி**
நிகழ்ச்சி தொகுப்பாளர்,
பொழில் பண்பலை, திருச்சி

'பொழில் பண்பலை' என்பது இலக்கியத்திற்காக மட்டும் இயங்கும் ஒரு பண்பலை ஆகும். தற்காலத்தில், விளம்பரங்களுக்காகவும் பொருளாதார வளங்களுக்காகவும் இயங்கி வரும் இன்றைய ஊடகங்களுக்கு நடுவே தமிழ் இன உணர்வை ஒன்றே நோக்கமாகக் கொண்டு, சங்க இலக்கிய கருத்து வளம் எளியோரும் அறிய வழி வகுக்க வேண்டும் என்ற உயர்ந்த இலக்கோடு செயலாற்றி வருவதை அதனுள் இருந்து செயலாற்றிய அனுபவத்தால் உணர்ந்துள்ளேன். பாவலர் எல்ல கிருஷ்ணமூர்த்தி என்ற ஒற்றை மனிதரின் மாபெரும் முயற்சி. பொழில் பண்பலையில் யாவரும் குடும்பங்களாக கைகோர்த்துச் செயல்பட, இன்று 190 நாடுகள் தாண்டி விரிந்து கடல் கடந்து விரவி நிற்பதை உணர முடிகின்றது.

பாரபட்சம் இல்லாமல் சிறுவர் தொடங்கி பெரியவர் வரை அவரவர் இலக்கியத் திறமையை வெளிப்படுத்த அருமையான வாய்ப்பு. பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டியப் பணியை பொழில் பண்பலை மேற்கொண்டு வருகிறது. பாடபுத்தகத்தில் இலக்கியங்களாய் பாடல்களாய் படித்தவைகளை செவிநுகர் கனிகளாய் இசை அருவியாய் சிந்தனை வளம் சேர்க்கும் உரைகளாய் மதிநுட்பம் மிகு சான்றான்மை உள்ளங்கள் வழி பல்வேறு நிகழ்ச்சிகளால் நாளும் நாளும் மெருகேற்றி தனித்துவம் மிக்கதாய் பொழில் பண்பலை திகழ வித்திட்ட சாதனை போற்றுதற்குரியது. மென்மேலும் மெருகேற உறுதுணையாய் கரம் கோர்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி
**முனைவர் மு.ஜோதிலட்சுமி**
திருச்சி



## கவிஞர் எல்லப்பன் வெங்கடாசலபதி

நிகழ்ச்சித் தொகுப்பாளர்,
பொழில் பண்பலை சிங்கப்பூர்

## பொழில் பண்பலை நிகழ்ச்சி

வானொலி நிகழ்ச்சியின் தொகுப்பாளன் என்ற முறையில் எனது கண்ணோட்டம். செம்மொழியாம் தமிழ் உலகளவில் வியக்கத்தக்க வகையில் வளரும் நிலையில் சிங்கப்பூர் வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பின் தலைவர் திரு எல்ல.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முனைப்பில் உருவாக்கப்பட்ட பொழில் பண்பலை என்ற வானொலி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று முன்னேறிக் கொண்டு வருகிறது.

இதன் சிறப்பு என்னவென்றால் மாணவர் நிகழ்ச்சி கவியரும்பு பொதுப் பிரிவு கவிநயம் மற்றும் மரபுகவிதை பிரிவு கவிப்பொழில் (முன்னர் பொழில் பாமாலை) என வகுத்து திறம்பட ஒவ்வொரு ஞாயிறு தோறும் சிங்கப்பூர் நேரம் 7:30 மணி முதல் நடத்தி வருகிறோம்.

பொழில் பண்பலையின் சிறப்புகள்

1. இந்த நிகழ்ச்சியில் கொடுக்கும் தலைப்புகள் சிந்தனையை தூண்டும் வகையில் அறிய பழந்தமிழ் சொற்கள் இலக்கியத்திலிருந்தும் அன்றாட வாழ்வில் மறைந்து போன சொற்கள் கொடுக்கப்பட்டு அதை நமக்கு மீண்டும் அழிந்து போகாவண்ணம் ஞாபகப்படுத்துவது.

2. இந்த நிகழ்ச்சியில் இளங்கலைத் தமிழ் பட்டதாரிகளும் தமிழ் அல்லாத பிற பிரிவு படிக்கும் மாணாக்கர்களும் கவிதை தானே புனைந்து அதை அவரவர் குரலில் கவிபாடுவதே தனிச் சிறப்பாகும்.

3. தமிழ் ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியைகள், தமிழ் முனைவர்கள், மற்றும் என்னைப் போன்று தமிழ் ஆர்வலர்கள், கவிதை புனைந்து நிகழ்ச்சி படைப்பது மென்மேலும் சிறப்பாகும்.

4. உலகெங்கிலும் உள்ள வானொலி ஆர்வலர்கள் இந்நிகழ்ச்சியை கேட்டு ரசித்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும்போது நிகழ்ச்சி படைப்பாளன் என்ற முறையில் பரவசப்படுகிறேன்.

5. ஒவ்வொருவரின் சிந்தனையும் கற்பனையும் கருத்தும் உணர்வுகளும் கவிதையின் படைப்பில் முற்றிலும் வித்தியாசப்பட்டு இருக்கும். தமிழ் பற்றிய தேடலும் தகவலும் பல கோணங்களில்

பகிரப்பட்டு நிகழ்ச்சி அமைப்பு மனத்தை நெகிழ்ச்சி அடையச் செய்யும் தொகுப்பாளன் என்ற முறையில் என்னை கவர்ந்தது. இளைய சமுதாயத்தை இந்த நிகழ்ச்சியை நடத்தவும் அவர்களுக்கு கவிதை எழுதும் உணர்வை தூண்டுவித்ததும் ,தமிழ் இலக்கியங்களைப் படிக்கத் தூண்டியதும் தமிழ் கற்க அவர்களை மென்மேலும் மெருகேற்றியதும் அசாத்தியமான செயலே.

முதன் முறையாக இந்நிகழ்ச்சியின் மூலமாகத்தான் தொகுப்பாளன் என்ற அங்கீகாரமும் மகிழ்ச்சியும் கிடைத்தது. தொகுப்பாளனான எனக்கு முழு சுதந்திரம் அளித்து சிறப்பான முறையில் கவிதை விமர்சனம் செய்யவும் ஆர்வத்தை தூண்டி உலக அளவில் என்னையும் இந்த நிகழ்ச்சி படைப்பாளிகளையும் தெரிய வைத்ததற்காக சிங்கப்பூர் வாழ்வியல் இலக்கியப் பொழில் தலைவர் மற்றும் பொழில் பண்பலையின் நிறுவனர் பாவலர் எல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல் அவருக்கு நன்றி கடன்பட்டிருக்கிறேன்.

**எல்லப்பன் வெங்கடாசலபதி.**

சிங்கப்பூர்

**ஆ.பூபாரதி,**
நிகழ்ச்சித் தொகுப்பாளினி,
பொழில் பண்பலை, சென்னை

என் முன்னோர்கள் கூடி தமிழ் வளர்க்க, மதுரையில் அமைத்தச் சங்கம் முச்சங்கம். என் தமிழை நான் வளர்க்க என்னை இணைத்தச் சங்கம் சிங்கப்பூரிலுள்ள பொழில் பண்பலை.

பொழில் பண்பலையில், தேன்தமிழ் பாடல்கள், நமது முன்னோர்கள் இயற்றிய இலக்கியங்களை, கேட்போரின் செவிகளுக்கு விருந்தளிக்கும் வகையில் ஒரு கதை வடிவில் அதன் கருத்துக்களை அழகாகவும், ஆழமாகவும் கூறுவதோடு, மாணவர்களிடமும் நமது தமிழ் மொழியின் அருமையை கொண்டு செல்லும் விதமாக கவி அரும்பு, கவிநயம் மற்றும் கவிப்பொழில் (முன்னர் பொழில் பாமாலை) போன்ற கவிநிகழ்ச்சிகளில் வாரம் ஒருமுறை (ஞாயிறு), கல்லூரி மாணவர்கள் படைத்த புதுக்கவிதைகள் மற்றும் மரபுக்கவிதைகளை வானொலியில் வலம்வரச் செய்வர்

தமிழ்ப்பற்றினால் பொழில் பண்பலையில் இணைந்த நான், தற்போது ஒரு தொகுப்பாளினியாக வலம் வருவதில் பெருமகிழ்ச்சிக் கொள்கிறேன். என் தமிழ் மொழியின் ஆழத்தையும், பண்பாட்டையும் அறிய ஒரு மிகச்சிறந்த சூழலை அமைத்துத் தந்திருக்கும் பொழில் பண்பலைக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆ.பூபாரதி**
சென்னை

**கவிஞர் ஆ. நவீன்குமார்**
நிகழ்ச்சித் தொகுப்பாளர்,
பொழில் பண்பலை, மேலக்காவனூர்

தங்கத் தமிழைத் தரணியெங்கும் முழங்க சங்காக முழங்கும் மங்காதப் பொழிலே! வணங்குகிறேன் உன்னையும் வாழவைக்கும் தமிழ் அன்னையையும்!

பொழிலோடு கடந்த ஓராண்டாகப் பயணித்து வரும் நான் ஆ. நவீன்குமார் இளங்கலைத் தமிழ் மாணவன். தமிழ் மீதுள்ள சிறு ஆர்வத்தில் அவ்வப்போது இலக்கியம் சார்ந்த போட்டிகளில் பங்கேற்று வந்த என்னை மற்றும் எனது கல்லூரி மாணவர்களை எங்கள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன் அவர்கள் அடையாளம் கண்டு திறம்பட பயிற்சி அளித்து எங்களை பொழில் என்னும் இந்த மாபெரும் தமிழ் அமைப்பிலே சேர்த்து எங்களை வளமாக்கினார்.

பொழிலில் நுழைந்த போதே நூற்றுக்கணக்கான ஆச்சரியம்! அமைப்பின் உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பேராசிரியர்களே இருந்தனர். அமைப்பின் சிறப்பை அப்போதே அறிந்துக்கொண்டேன்! தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் கிராமத்தில் வசிக்கும் எனது குரலை 190க்கும் மேற்பட்ட நாடுகளில் ஒலிக்கச் செய்த பாவலர் எல்ல, கிருஷ்ணமூர்த்தி அய்யா அவர்களுக்கும் இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன் அய்யா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

வையத்தின் மனிதர்களே வாருங்கள் தமிழை வளர்ப்போம் !
வளமான பொழிலில் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன !
வாசல்கள் என்றும் திறந்தே இருக்கும் !

**ஆ. நவீன்குமார்**
இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு,
மேலக்காவனூர்

**கவிஞர் க. காயத்ரி**
நிகழ்ச்சித் தொகுப்பாளினி,
பொழில் பண்பலை, வெள்ளூர்

## பொழிலின் ஊக்கம்

தமிழுறவுகளுக்கு வணக்கம்,

சிங்கப்பூர் வாழ்வியல் இலக்கியப் பொழில் பண்பலையில் கவிதை வழி அறிமுகமாகி இப்பொழுது தொகுப்பாளினியாக உள்ளேன். பொழிலின் சிறப்புகளும் பழமையிலும் புதுமைகள் பல செய்வதும் வியப்புக்குரிய ஒன்று. சிறியோர் முதல் பெரியோர் வரை சிந்திக்க வைக்கும் ஆற்றல் பெற்றது. வாழ்விற்கு வழிகாட்டும் அற இலக்கியத்தையும் வானலையில் ஒலிபரப்பு செய்து வருகிறது.

பேராசிரியர்கள், மாணவர்கள் எனத் தொடங்கி தமிழ்த்துறையோடு நின்று விடாமல் இயற்பியல் பயிலும் எனக்கும் கிட்டியது வாய்ப்பு, எங்கள் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் சேந்தன் பனையவயல் சிவகவி காளிதாசன் அவர்கள் வழிகாட்டுதலின்படி பொழில் பயணம் தொடங்கியது.190 நாடுகளுக்கு மேல் கடல் கடந்து பயணிக்கிறது. ஒரு துறை சார்ந்து பயணிக்கவில்லை மருத்துவர், பொறியாளர், பேராசிரியர்கள் எனத் தொடங்கி மாணவர்கள் என அனைவரும் ஒரு சேரப் பயணிக்கிறோம் தொடர்ந்து பயணிப்போம்.

நன்றி
**க. காயத்ரி**
வெள்ளூர்

## கவிஞர் இராகேஷ்வரி ராஜகுரு


நிகழ்ச்சித் தொகுப்பாளினி,
பொழில் பண்பலை, சென்னை

ஓர் அழகான வீட்டு தோட்டத்தில் பூத்திருந்த பூவை பொழில் சோலையில் தமிழ் தென்றல் வீசி பூக்க வைத்து அதனை உலகெங்கிலும் உள்ள மக்கள் அனைவரையும் மகிழ வைத்த பொழில் பண்பலை நிறுவனர் பாவலர் எல்ல கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களுக்கும் இந்த பூவை பொழிலில் பூக்க செய்த அம்மா முனைவர் கி.துர்க்காதேவி மற்றும் அம்மா முனைவர் R.ஷர்மிளா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

பொழில் பண்பலையில் முதன்முறையாக புன்னகை எனும் ஒற்றை தலைப்பில் கவிதையினை துவங்கியவள் நான், ஆனால் மறுவாரமே தொகுப்பாளினியானேன். நம் பொழிலில் ஒவ்வொரு வாரமும் எத்தனை பொருள் நிறைந்த தலைப்புகள், எத்தனை விதமான கவிதைகள் அதன் மூலம் பல தகவல்கள் என உலக மக்கள் அனைவருக்கும் வானொலி வழியாக தமிழ்ப்பாலை புகட்டி வரும் பொழிலில் நானும் ஒரு அங்கமாக இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**இராகேஷ்வரி இராஜகுரு**
சென்னை

## பொழில் பயணம் மைல்கல்






978-981-18-8663-6